Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ்

பல், மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.)

இல. 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:– 021 222 7893.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 17 (27.02.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 150

### சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# இடைக்கால அபிவிருத்திச் சபை; அரசும் புலிகளும் இணக்கமாம்!

## நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, மாவட்ட மட்டங்களில் இடைக்கால நிர்வாக அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளதாக நோர்வேத் தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டும் கொழும்புச் செய்தியொன்று தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின்படி அடுத்துவரும் இரண்டுவார காலத்திற்குள் இதுகுறித்து உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேச இடைக்கால அபிவிருத்தி அதிகாரசபை சுனாமியால் அழிவுகளுக்குள்ளான வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசிலிருந்து ஜே.வி.பி ஒருபோதும் வெளியேறாது!

### டி.எம்.ஜெயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி ஒருபோதும் வெளியேற மாட்டாது என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலர் விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுக்கு அமைச்சுப்பதவி

### அரசதரப்பு இணக்கம் தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் அரசாங்கத்திற்குமிடையே உள்ள கருத்து முரண்பாடுகளை நீக்கும் வகையில் அடுத்து வரும் வாரங்களில் ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதனைவிட மலையகத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் 500 பேருக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கும் அமைச்சரவை அங்கீகாரம் உடன் செயற்படுத்தப்படுமெனவும் இந்த அமைச்சர் தொண்டமானிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பேச்சுக்களை ஆரம்பிக்க தருணம் இதுவல்லவாம்!

### புதுடெல்கியில் கதிர்காமர் தெரிவிப்பு

(புதுடெல்கி)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான நேரம் இதுவல்ல எனவும், இது சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டை புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டுமானம் செய்வதற்கான நேரமெனவும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவேளை, உடனடியாக உதவிசெய்தமைக்கு நன்றி தெரிவிப்பதற்காக மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள கதிர்காமர் – நேற்று புதுடெல்கியில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது –

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் எதிர்கால மீள்கட்டுமானப்



தொண்டமானிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக எதிர் வரும் 28 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தொண்டமானுக்கும் இடையில் விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

வது –

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் எதிர்கால மீள்கட்டுமானப் பணிகளின் திட்டத்தில் இந்தியா முக்கிய பங்கை வகிக்க வேண்டும்.

சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்ட உடன் இந்தியா உதவி செய்யவில்லையென்றால் என்ன நடந்திருக்கும்? நாம் இந்த அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு எவ்வித தயார்ப்படுத்தலையும் மேற்கொண் (12 ஆம் பக்கம் பார்க்க)



# நலன்புரி முகாம்களில் படையினர் விடுதலைப் புலிகள் கண்டனம்!

## எரிக்சொல்ஹெய்மிடம் எடுத்து விளக்கம்

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் படையினர் நிலைகொண்டிருப்பது குறித்து – விடுதலைப்புலிகள் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்மிடம் முறையிட்டுள்ளனர்.

நேற்றுஅம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்முடன் நடைபெற்ற சந்திப்பின் போதே விடுதலைப் புலிகள் இது குறித்து சுட்டிக்காட்டினர்.

நிவாரணப்பணிகள் ஜனாதிபதியால் இராணுவ அதிகாரிகளின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது படையினரின் தலயீட்டிற்கு வழிவகுத்துள்ளது. இதனால் நிவாரணப் பணியாளர்க (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியத் தூதுவர் நிருபமா குடாநாட்டுக்கு திடீர்விஜயம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் நேற்று வடமராட்சி – பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந் தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் தலைமையிலான ஆறுபேர் கொண்ட குழுவினர். விமானமூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து ஹெலிகொப்ரர் மூலம் வடமராட்சி பிரிகேட் தளத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து இராணுவப் பாதுகாப்புடன் தரைவழியாக பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலையை காலை 10.45 மணியளவில் வந்தடைந்தனர்.

இந்தியத் தூதுவர் நிருபமாராவ் குழுவினர் மந்திகை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கதிரவேற்பிள்ளை தலைமையில் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இங்கு இலங்கைக்கான இந்தியத்துவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உடன்பாட்டில் ஒப்பமிட இந்தியா – இலங்கை இணக்கம்!

(புதுடெல்கி)

மூன்று நாள் விஜயமாக புதுடெல்கிக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் – இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் போது – இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு உடன்பாட்டை செய்து கொள்வதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

இதன்படி இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப்முகர்ஜியுடன் கதிர்காமர் இரு நாடுகளுக்குமிடையிலான புலனாய்வுத்தகவல்களை பரிமாறிக் கொள்வது (12 ஆம் பக்கம் பார்க்க)

UNIT
நாங்கள் வரண்டியில்லாப் பொருள் எதுவும் விற்பதில்லை
Compaq PIII கணனிகள் மொனிற்றருடன் just Rs. 31000/- முதல் 1 வருட உத்தரவாதம்
PIV 2.4 Complete கணனிகள் மொனிற்றருடன் @ Colombo based price
Possible which impossible
3 வருட பூரண உத்தரவாதம்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
வதந்திகளை நம்பி உங்கள் பணத்தை வீணடிக்காதீர்கள்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

## கருத்தரங்கு

கியூடெக் நிறுவனத்தின் கரண வாய்செல்வாபுரம்மகளிர் குழுக்களுக் கான கருத்தரங்கு இன்று காலை செல்வாபுரம் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சுயதொழில் வேலைத்திட்டம் தொடர்பான திட்டமிடல் பற்றிய விழிப் புணர்வுக் கருத்தரங்கில் துறைசார் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ள னர். இதேவேளை சக்கோட்டை புனித சவேரியார் தேவாலய மண்ட பத்தில் குழுத் தலைவர்களுக்கான கருத்தமர்வு இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (91)

## தமிழீழ நுண்கலைத்துறை நடத்தும் ஓவியப்போட்டி!

தமிழீழ நுண்கலைத்துறை நடத்தும் ஓவியப்போட்டிப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு புதுக்குடி யிருப்பில் அமைந்துள்ள முல்லை மாவட்ட தமிழீழ நுண்கலைக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி நல்லூர் ஸ்தான தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை 10 மணிக்கும் –

கிளிநொச்சியில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியால யத்திலும் மேற்படி போட்டி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களுக்கான அனு மதி அட்டைகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்றும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் போட்டிப்பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கு வருமாறும் தமிழீழ நுண்கலைக் கல் லூரியின் பணிப்பாளர் க.தணிகை மாறன் தெரிவித்தார்.


மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த
சுக்ரன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
அஜித் –திரிஷா, மணிவண்ணன், விஜயகுமார் நடித்த
ஜி
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00


## சிறு விளம்பரம்


### தட்டச்சு வகுப்பு

தமிழ் ஆங்கில தட்டச்சு வகுப்புக் கள் 28.02.2005 இல் ஆரம்பம். தொடர்பு: N.S.T.C.A., 8/1, அம்மன் வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(1072)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல் இன்று மட்டும்
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
ஜெய் ஆகாஸ், பிரமதி, நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த
குருதேவா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விரைவில் எதிர்பாருங்கள். எமது அடுத்த வெளியீடு

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த
மானஸ்தன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

### மோட்டார் சைக்கிள் வாடகைக்கு


மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட் டார் சைக்கிள் வாடகைக்கு வழங் கப்படும். தொடர்பு:360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.T.P 0776-544544, 077-6660177.(1054)

### மாதாந்த தவணை அடிப்படையில்

சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள், மின்சார உபகரணங் கள், மோட்டார் சைக்கிள்கள் என் பன மாதாந்த கட்டுப்பண முறை யில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.T.P 0776-544544, 077-6660177.(1055)


## மக்களின் தேவைகளை தனது சேவையால் நிறைவு செய்த செம்மல்!



திரு.வே.க.ஏரம்பு அவர்கள் புங்குடுதீவு, பெருங்காடு 1 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் பெற்றார். சரவணை என்னுமிடத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னம்மா என்பவரைத் தனது வாழ்க்கைத் துணைவியாக இவர் ஏற்றுக்கொண்டார். அருணாதேவி, சிறிதரன், மதிவதனி, பாலச்சந்திரன் (மாவீரர்) ஆகியோர் இவர்களுடைய பண்பு காக்கும் பிள்ளைகளாயினர்.

தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் திரு.வே.க.ஏரம்பு அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு தான் கல்வி கற்ற ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலேயே தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். ஆசிரியராகவும், அதிபராகவும், கல்வி அதிகாரியின் உதவியாளரா கவும், பணியாற்றிய இவர் தனது திறமையினாலும், சேவை மனப்பான்மையினாலும் முதலாம்தர அதிபராகப் பல பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார்.

தானுண்டு, தன் தொழிலுண்டு என்று மட்டும் இருந்துவிடாது, தான் பணிபுரியும் பாடசாலையின் அபிவிருத்திக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது உழைத்தார். அதனால் எல்லோரது அன்புக்கும், பண்புக்கும் பாத்திரமானார். இதனால், இத்தகைய சிறப்பியல்புகளினால் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தார். இதன்மூலம் ஆசிரிய சமூகத்துக்குத் தன்னாலான, அளப்பரிய சேவைகளை நல்கினார்.

இவருடைய காலத்தில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் வலுவுள்ளதும், எழுச்சி பெற்றதுமான ஒரு சங்கமாகத் திகழ்ந்தது. ஆசிரியர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட வேளைகளில், அவர்கள் பாரபட்சமாக நடாத்தப்பட்ட வேளைகளில், தொழிற்சங்கம் மூலம் போராடி, அவர்களின் துயர் துடைத்த பெருவள்ளல் ஆவார். இவருடைய பயன்கருதாப் பணியும், நேர்மை உள்ளமும் இவரது சங்கச் செயற்பாடுகளின் வெற்றிக்கு வித்திட்டன.

அரசியல் வாழ்விலும் இவர் ஏறுநடை போட்டார். தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினராகவும் விளங்கிய இவர், தீவக மக்களுக்கும், தீவகத்தின் அபிவிருத்திக்கும் அயராது தொண்டாற்றிய பெருமகனாவார். தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டவேளைகளில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டு, திருகோணமலை வரைக்குமான பாதயாத்திரையிலும் பங்குகொண்டுள்ளார்.

எங்கே மக்கள் அல்லல் படுகிறார்களோ, அங்கே சென்று அவர்களுடைய இன்னல்களைக் கேட்டறிந்து, அவர்களுக்கான உதவிகளைப் புரிவதில் இவருக்கு நிகர் இவரே. தமிழ்ப் பணியோடு மட்டுமல்லாது சமயப் பணிகளிலும் இவர் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அதற்கேற்ப பெருங்காடு கந்தசுவாமி கோவில், சிவன் பதியிலும் அயராது தொண்டுபுரிந்து ஆலயச் சிறப்புக்கு வழிசமைத்தார். சமயப் பணியெனச்சொல்லும்போது, தீவுப்பகுதி மக்களுக்கு என்றில்லாது யாழ்.மாவட்ட அனைத்து மக்களுக்குமான பணிகளிலும் தன்னை அர்ப்பணித்தவர் என்றே கூறலாம்.

எங்கு செல்ல நேர்ந்தபோதும், அவரது தேசிய உடையும், நிமிர்ந்த நடையும், நெற்றியில் இட்டிருக்கும் சந்தனப் பொட்டும் எல்லோர் மனங்களிலும் அவரது ஆளுமையைப் பறைசாற்றி நிற்கும். யாருக்கும் அஞ்சாத துணிவும், அடுத்தவரின் நிலையறிந்து உதவும் பண்பும் அவரை என்றும் தலைகுனிய வைத்ததில்லை. புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் இயக்குநர்சபை உறுப்பினராகப் பணியாற்றி அனைவரினதும் பாராட்டுக்களை இவர் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இன்று இத்தகைய சேவையாளனை, எல்லோர் உள்ளத்திலும் உறைந்துபோயிருக்கும் உத்தமனை இழந்து நிற்கின்றோம். இவருடைய இழப்பு, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு, குறிப்பாகத் தீவக மக்களுக்கு ஆற்றமுடியாத பேரிழப்பாகுமெனில் மிகையாகாது.

நாட்டுப்பற்றாளர்
**திரு.வே.க.ஏரம்பு**
அவர்கள்

அன்னாரின்
இழப்புத் துயரில் தோய்ந்திருக்கும்
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்
புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(C-3851)


மலிவு மலிவு மலிவு மலிவு மலிவு மலிவு மலிவு

10% முதல் 40% வரை
விலைக்கழிவில்:-
பாடசாலை மாணவருக்கான கறுப்பு,வெள்ளை சப்பாத்துக்கள், ஆண்கள், பெண்களுக்கான பாதணிகள் மலிவு விலையில் கொள்வனவு செய்திட நாடுங்கள்



DSI
RANPA
SAM SON

DSI காட்சி அறை
426, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். T.P.: 6809

பாதணிகள் மலிவு விற்பனை

(C/3829)

# இடைக்கால நிர்வாகத்தை அமைத்து வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதில் தவறில்லை!

## டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக அமைப் பொன்றின் மூலம், வடக்கில் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அவசர மனி தாபிமான உதவிகளை வழங்கு வதில் தவறில்லை எனப் பிரதி அமைச்சர்கள் குழுவின் தலைவர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தொலைக்காட்சி யொன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே டிலான் பெரேரா இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யுத்த நிறுத்தத்தின் மூன்றாவது நிறைவை முன்னிட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர் பாக நாடாளுமன்றத்தில் விமல் வீர வன்ச அறிக்கைஒன்றைவெளியிட்டார்.

இந்த அறிக்கை அரசாங் கத்தின் அறிக்கை அல்ல என்பது போன்ற சில கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

அவசர மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை வடக் குக்கு வழங்க வேண்டும். இதில் என்ன தவறு?.

அவசர மனிதாபிமான உத வியை வடக்கு–கிழக்கு மக்க ளுக்கு வழங்க வேண்டும். சுனாமி கடற்கொந்தளிப்பு, வடக்கையும்– கிழக்கையும் தனித்தனியாக பிரித் துக்காட்டவில்லை. இன, மத, மொழி, அரசியல் என் பவற்றை மீறி, சுனாமி யால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு ஏதாவது உதவு வது அரசின் பொறுப்பு. விடுவிக் கப்படாத பகுதிகளில் ஏதாவ தொரு இடைக்கால ஏற்பாட்டை விடுதலைப் புலிகளுடன் செய்து, அங்கு சென்று நிவாரணம் வழங்கு வது எங்களது பொறுப்பு.

இடைக்கால ஏற்பாட்டின் கீழ் இனப்பிரச்சினை தொடர்பான இறு தித் தீர்வுக்கான பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்படலாம் என கூறப்பட் டுள்ளது.

சமாதானப் பேச்சை ஆரம்பிப் பதற்கு இடைக்கால அரசுஒன்றை அமைப்பது முக்கியமாகும். அரசி யற்கட்சி என்ற வகையில் எமது நிலைப்பாட்டை மாற்ற முடியாது. சில வருடங்களுக்கு முன்னர், சில கட்சிகள்– இந்தியாவுக்கு எதிராக இருந்தன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த, உயர்தர வகுப்புகளில் தகவல் தொழில்நுட்பப் பாடம் !

## மே மாதம்முதல் அறிமுகமாகும்

(கொழும்பு)

க.பொ.த உயர்தர மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாக அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீமானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் மே மாதம் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பம், ஒரு பாடமாக அறிமுகம் செய்து வைக்கப்படும். இந்தப்பாடத்தை கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை அடுத்த மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து, கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியன இணைந்து நடத்தவுள்ளதாகக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்புடைய அனைத்துப் பாடப் புத்தகங்களும், அனைத்துப் பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தை சாதாரணதர மாணவர்களுக்கு அறி முகப்படுத்துவது அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பமாக வுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (தே)

# ஆசிரியர்களின் பதவி உயர்வு சலுகைக் காலம் நீடிப்பு!

(கொழும்பு)

ஆசிரிய சேவையிலுள்ளவர்களின் பதவி உயர்வுக்குத் தேவைப் படுகின்ற சலுகைக்காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கல்விச்சேவை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு – ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியளித் துள்ளதாக, இலங்கை இஸ்லாமிய சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.அனஸ் தெரிவித்தார்.

சேவைக்காலம், புள்ளி அளவுகளை அடிப்படையாகக்கொண்டு, பதவி உயர்வு வழங்கும் திருத்தத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத் ததைத் தொடர்ந்து, தகுதிபெறும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும் சுற்றறிக்கை தற்போது கல்வி அமைச்சில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

2001/12 சுற்றறிக்கை மூலம் பாதிக்கப்பட்ட 46,298 பயிலுநர் ஆசிரியர்கள் இதன்மூலம் விசேட நன்மை பெறவுள்ளதாகவும் தெரி வித்தார்.

# வாகரைப் பிரதேச கட்டுமானப் பணிகளுக்கு புலிகளால் துரித செயலணிக்குழு அமைப்பு

(திருகோணமலை)

போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வாகரைப் பிரதேசத் தின் அடிப்படை உட்கட்டுமானப் பணிகளைத் துரிதகதியில் மேற் கொள்ளும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர், துரித செயலணிக்குழு வொன்றை அமைத்துள்ளனர்.

மூதூர் தொடக்கம் வாகரை வரையிலான பிரதேசத்தின் அர சியற்துறை வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கென, சிறப்பு அர சியற்துறைப் பொறுப்பாளராகச் செம்மணன் அண்மையில் நியமிக் கப்பட்டதை அடுத்து, இந்தப் பிர தேசத்தின் – கல்வி, பொருளாதா ரம், வைத்தியசேவை, வீதி அமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் என்பவற்றைத் துரிதகதியில் மீள மைக்கும் வேலைத்திட்டங்கள், நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அரசியற் துறையினர், தமிழர் புனர் வாழ்வுக் கழகம், யுனிசெப் நிறுவனம், கல்வித் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடனும், பங்கு பற்றுதலுடனும் இவை நடை முறைப்படுத்தப்பட்டு வருகின் றன.

வாகரைப்பிரதேசத்தின் அபி விருத்திப் பணிகள் தொடர்பாக இந்தப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரசாங்கத் திணைக் களத் தலைவர்களையும், உயர் அதிகாரிகளையும் – செம்மணன் கடந்த புதன்கிழமை வாகரைப் பிரதேச செயலகத்தில் வைத்துச் சந்தித்து உரையாடினார்.

வாகரைப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலை பௌதிகவள மீள் கட்டமைப்பு செயற் பாடுகள், ஆசிரிய ஆளணிப் பகிர்வு என்பன குறித்து, இந்தப் பிரதேச அதிபர்கள், ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றிலும் செம்மணன், திருமலை மாவட்டத் தமிழ் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி ஆகியோர் உரையாடினர்.

வாகரைப் பிரதேசத்துக்குரிய கல்குடா கல்வி அலுவலகம் சுனாமி தாக்கத்தால் அழிவடைந்த நிலை யில், இந்தச் சந்திப்பு ஊரியன்கட்டு அரசினர் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்றது.

மருதங்குடா தமிழ் வித்தியா லய விளையாட்டுப் போட்டியில்– சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட செம்மணன், இந்தப் பாட சாலை மாணவர்களின் இரவுநேரக் கற்றல் செயற்பாடுகளுக்கு உத வும் முகமாக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய கல மின் விளக்குத் தொகுதி ஒன்றையும் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய் தனர்.

இந்த விளையாட்டுப் போட்டி யில் ஆண்டான்குளக் கோட்ட இராணுவத் தளபதி வீரா மற்றும் கல்குடா வலயக்கல்விப் பணி மனையின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மொகதின் மற் றும் கல்வி அதிகாரி நசீர், புரட்சி ஆகியோர் கலந்து கொண்ட னர். (10)

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்ட மூன்று ஆரம்ப சுகா தார நிலையங்கள் நாளை திங் கட்கிழமை திறந்துவைக்கப்பட வுள்ளன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் –நிர்மாணிக் கப்பட்ட பிரான்பற்று ஆரம்ப சுகா தார நிலையம், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் – நிர்மாணிக்கப்பட்ட குட்டி யப்புலம் ஆரம்பசுகாதார நிலையம் மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் – நிர் மாணிக்கப்பட்ட வியாபாரி மூலை ஆரம்ப சுகதார நிலையம் என் பனவே நாளை திறந்துவைக்கப் படவுள்ளன

# சிறுவர்களைச் சுதந்திரமாக வாழவைக்கும் ஒரே அமைப்பு விடுதலைப் புலிகள்தான்!

## ஐ.நா.செயலருக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் கடிதம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் சிறுவர் களைப் படையில் சேர்த்துக் கொள் வதாக ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்திருந்த கருத்தை, கிழக்குப் பல்கலைக் கழக சமூகம் வன்மையாகக் கண் டித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சிறுவர்களைக் கட்டாய மாகப் படையோடு ஆட்சேர்க்கும் நாடுகள், அமைப்புகள் பட்டியலில் உள்ளடக்க, ஐ.நா.முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக அறி கிறோம்.

சிங்களப் பேரினவாதத்தின தும், பேரினவாத அரசிடமிருந்தும் தமிழ்மக்களைப் பாதுகாக்கக் கூடிய, அவர்களின் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ வழிசெய் யக்கூடிய ஒரே அமைப்பாகத் தமி ழர்கள் விடுதலைப் புலிகளையே நம்பிக்கை கொள்கின்றனர்.

படைத்துறை ரீதியில் மிகப் பாரிய வெற்றிகளைப் பெற்றுத் தந்த விடுதலைப் புலிகள், சர்வதேச சமூகத்தினது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, ஒரு யுத்த நிறுத் தத்தைப் பிரகடனப்படுத்தியதுடன், சமாதானத்துக்கான தமது முன் முயல்வை வெளிப்படுத்தினார்கள்.

பல்வேறுபட்ட உள்ளூர், சர்வ தேச அமைப்புகளுடன் நல்லுற வைப் பேணி, அவர்களின் நட வடிக்கைகளுக்கும் பூரண ஒத் துழைப்பை வழங்கிவந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் சமா தான ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டதுடன், அதனை பல்வேறு ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியி லும் இதுவரை இறுகக் கடைப் பிடித்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் – அரச பயங்கரவாதம் தன் படைத்துறை யைக் கொண்டு ஏவிவிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளின்போது, தமது தாய், தந்தையரைப் பலி கொடுத்த இளைஞர்களை காப் பகங்கள் அமைத்து, பாதுகாத்து, பராமரித்தவர்கள் இவர்கள். இன்றும் இந்த வகையான காப்பகங் கள் பல சிறப்பாக இயங்கிவருகின்றன.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது, புலிகள் மேற்கொண்ட மீட்பு நிவாரணப் பணிகளை சர்வதேச சமூகமே வியந்து பாராட்டி நின்றது. அந்த அனர்த்தத்தில் உறவு களைப் பறிகொடுத்த சிறுவர்களை யும் அரவணைத்து பராமரிக்கும் பாரிய பணியையும் விடுதலைப் புலி கள் செய்து வருகின்றனர். மற்றும் விடுதலைப் புலிகளுடன் சுயமாக இணைந்துகொண்ட சிறுவர்கள் பலர், பல்வேறு சந்தர்ப்பங்களில் யுனிசெப் ஊடாகவும், பொது அமைப் புகள் ஊடாகவும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில்கூட இவ்வாறு 23 சிறுவர்கள் கிளிநொச்சியில் பெற் றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இன்று ஐ.நா.வெளியிட்டிருக்கும் ஆட்சேர்க் கப்பட்டுள்ள சிறுவர்கள் பட்டியலில் உள்ள பெருக்குரிய அநேகர் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பது எம்மால் காணமுடிகிறது. மாணவர்கள், தொழில் செய்பவர்கள் என திரு மணம் செய்து குழந்தைகள் உள்ள வர்கள்கூட இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைமைகளில் பல சவால்களுக்கு மத்தியில் யுத்த நிறுத்தத்தை சீராகப் பேணியும், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம் பிக்க முன் முயற்சிகளை மேற் கொண்டும் அனர்த்தத்தில் பாதிக் கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் காத்திரமாக ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகள் மீது இந்த வகையான ஆதாரமற்ற கருத்துக் கள் கண்டிக்கத்தக்கதாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பெண் சிப்பாய்மீது வல்லுறவுக்கு முயற்சித்த இருவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு!

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் வைத்து பெண் இராணுவச் சிப்பாய் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்தமை தொடர்பாக– குளிரூட்டப்பட்ட தனியார் கடுகதி பஸ் ஒன்றின் சாரதியும், நடத்துனரும் கைதுசெய்யப்பட்டனர்,

பலாலி இராணுவ முகாமில் கடமைபுரியும் இந்தப் பெண்சிப்பாய் தனது சொந்த ஊரான அனுராதபுரத்தில் விடுமுறையைக் கழித்துவிட்டுக் கொழும்பு திரும்பும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த பெண்சிப்பாய் – பாலியல் வல்லுறவு புரிய முனைந்த இருவரையும் கடுமையாகத் தாக்கியதோடு, அவர்களின் காது மற்றும் முகம் போன்ற இடங்களில் கடித்துக் காயமேற்படுத்தியநிலையில் மற்றவர்களின் உதவியும் இவருக்குக் கிடைத்ததாகவும், இதையடுத்து பாலியல் வல்லுறவு புரியமுனைந்த இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இந்திய உதவியின் நினைவாக கதிர்காமர் மரம் நடுகை!

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் – இன்று மரக்கன்று ஒன்றை இந்தியா வில் நாட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடெல்கியில் அமைந்துள்ள இந்திய கேட்டுக்கு அருகில் இந்த மரக்கன்று நாட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு – இந்தியா வழங்கிய உடனடி மனிதாபிமான உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த மரக்கன்று நாட்டி வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் சிறப்புத் தூதுவராக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தியாவுக்குச் சென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (01)

# முஸ்லிம் மீனவர்களின் கோஷம்; கனேடிய மருத்துவக்குழு கவலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச முஸ்லிம் மீனவர்கள் கடந்த வியாழக்கிழமையன்று மருதமுனையில் இருந்து, சாய்ந்தமருது வரையுமான பிரதான வீதியில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின்போது, 'ஏற்று ஏற்று வெள்ளையனை வெளியேற்று' என்று உரத்த குரலில் கோஷமெழுப்பிச் சென்றுள்ளமை கவலைதரும் விடயமென, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிரதேச மக்களுக்கு, குறிப் பாக – சிறுவர்களுக்கு மருத்துவ உதவி அளித்துவரும் அம்டா கனேடிய மருத்துவக் குழுவின் இணைப்பாளர் அன்ரனி றிச்சட் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட முஸ்லிம் மீனவர்கள், வெள்ளையனே வெளியேறு என்று கூறியுள்ள விடயம் –கனேடிய மருத்துவக் குழுவில் அங்கம்வகிக்கும் வைத்திய நிபுணர்களுக்கு உளரீதியான பாதிப்புகளை உண்டுபண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. கனேடிய மருத்துவக் குழுவினர் உள்நோக்கம் எதுவும் இன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வைத்திய உதவிகளை நல்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இலங்கை மண்ணுக்கு வருகை தந்ததாகத் தெரிவித்தனர்.

### 3ஆவது போட்டியிலும் வென்று

# நியூஸிலாந்துக்கு எதிரான தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றியது!



(ஒக்லாந்து)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி தொடரைக் கைப்பற்றியது.

நேற்று ஒக்லாந்தில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தொடக்க வீரர்களாக கில்கிறிஸ்ட் - கடிச் ஜோடி களமிறங்கியது. இருவரும் நிதானமான ஆட்டங்களை வெளிப்படுத்தியதால் - நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் ஆரம்பத்தில் திணற நேரிட்டது. எனினும் ஸ்கோர் 68ஆக இருந்த போது- முதல் விக்கெட்டாக கில்கிறிஸ்ட் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார்.

அடுத்து கடிச்சுடன் பொண்டிங் இணைந்து கொண்டபோதும்- ஸ்கோர் 85ஆக இருந்த போதும் பொண்டிங் 11 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகி பவிலியன் திரும்பினார்.

இதையடுத்து களமிறக்கப்பட்ட மார்ட்டின் ஒரே ஒரு ஓட்டத்துடன் நியூஸிலாந்து வீரர்களால் வெளியேற்றப்பட்டார்.

அடுத்து சைமன்ஸ்-கடிச்சுடன் இணைந்து சற்றுநேரம் நின்றுபிடித்தார். எனினும் 21 ஓட்டங்களுடன் அவர் பவிலியன் திரும்ப கிளார்க் களம் புகுந்தார்.

இதன்பின்னர் ஆட்டத்தின் போக்கு மாறத் தொடங்கியது. எனினும் தொடக்க வீரர்களில் ஒருவராகக் களமிறங்கி நிதானமாக ஆடிக் கொண்டிருந்த கடிச் -ஸ்கோர் 128ஆக இருக்கும்போது ஆட்டமிழந்தார்.

கடிச் 78 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகளுடன் 58 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து ஹுசே களமிறங்கி கிளார்க்குடன் இணைந்து அவுஸ்ரேலிய அணியைக் கௌரவமான நிலைக்குக் கொண்டுசென்றார். இந்த ஜோடி ஆட்டநேர இறுதிவரை ஆடி இணைப் பாட்டமாக 136 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தது.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களைப் பெற்றது. கிளார்க் 75 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்களையும், ஹுசே 73 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 65 ஓட்டங்களையும் பெற்றநிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில், விற்றோரி 2 விக்கெட்டுக்களையும், கெய்ன்ஸ், மில்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து நியூஸிலாந்து அணி பதில் துடுப்பாட்டத்தில் இறங்கியது. அணியின் ஸ்கோர்



7ஆக இருந்தபோதே-கப்டன் பிளெமிங் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அடுத்து அஸ்ரில் -பப்ஸ் ஜோடியும் நீண்டநேரத்துக்குத் தாக்குப் பிடிக்கவில்லை.

பப்ஸ் 3 ஓட்டங்களுடன் காயம் காரணமாக பவிலியன் திரும்ப, மார்ஷல் களமிறங்கினார். ஆனால் ஸ்கோர் 45ஆக இருந்தபோதே, 27 ஓட்டங்களுடன் அஸ்ரில் ஆட்டமிழந்து சென்றார்.

இதனைத் தொடர்ந்து மார்ஷல்-மக்மிலன் ஜோடி இணைந்துகொண்டு - அணியின்



ஸ்கோரை 114ஆக உயர்த்தும்வரை போராடியது.

மக்மிலன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர், ஸ்கோர் 135ஆக இருந்தபோதே எச்.மார்ஷலும் 55 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

இதையடுத்து ஜே.மார்ஷலும் 14 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். இதன்பின்னர் ஸ்கோர் 161ஆக இருந்தபோது, விற்றோரியும் ஆட்டமிழந்தார்.

பின்னர், ஸ்கோர் 172ஆக இருந்தபோது- ஒரு ஓட்டத்துடன் மில்ஸும், ஸ்கோர் 178ஆக உயர்ந்தபோது - 23 ஓட்டங்களுடன் மக்கலமும் ஆட்டமிழந்ததால் நியூஸிலாந்து அணி தோல்வி கண்டது.

9 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால், நியூஸிலாந்து அணி 86 ஓட்டங்களால் தோல்விகண்டது.

பந்துவீச்சில் ஹொக் -3, லீ-2, கஸ்பரோவிச் -1, சைமன்ஸ் -1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

2001ஆம் ஆண்டு இலங்கையிடம் 4-1 என்ற அடிப்படையில் சொந்தமண்ணில் தோல்விகண்ட பின்னர், நியூஸிலாந்து அணி சொந்த மண்ணில் ஒருநாள் தொடரில் கண்ட முதல் தோல்வி இதுவாகும்.

### மொஹாலி டெஸ்ட் போட்டி

## பாகிஸ்தானுக்கு 7500 டிக்கெட்டுக்கள்

(லாகூர்)

மொஹாலியில் மார்ச் 8ஆம் திகதி தொடங்கும் இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்காக பாகிஸ்தானுக்கு 7500 அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அனுமதிச் சீட்டு விற்பனை லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இயக்குநர் அப்பாஸ் ஜைதி கூறியதாவது -

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 7500 அனுமதிச் சீட்டுக்களை அனுப்பியுள்ளது. லாகூரைத் தவிர கராச்சி மற்றும் இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அலுவலகங்களிலும் அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும்.

6 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு பாகிஸ்தான் அணி இந்தியாவில் விளையாடவுள்ளதால், ரசிகர்களிடம் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் மிக விரைவாக (24 மணி நேரத்தில்) விசா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விசா பெற்றுள்ளவர்கள் வாகா எல்லையிலிருந்து ரயில், பஸ் மூலமோ அல்லது நடந்தோ எல்லையைக் கடந்து செல்லலாம். எந்த முறையில் செல்கிறார்களோ அதேமுறையில் தான் பாகிஸ்தான் திரும்பவேண்டும் என்றார் ஜைதி.

## வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(மல்லாகம்)

தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதென கோட்ட அதிகாரி கைலைநாதன் தெரிவித்தார். (72)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று யாழ். பாரதி விளையாட்டரங்கில் காலை 10.00 மணிமுதல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உடற்தகுதியை நிரூபித்தால் ஒருநாள் போட்டியில் சந்தர்ப்பம்

### அக்தருக்கு கிரிக்கெட் சபை நிபந்தனை

(லாகூர்)

உடற்தகுதியை நிரூபிக்க வேகப் பந்து வீச்சாளரான அக்தருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை காலக்கெடு விதித்துள்ளது.

ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்படும் அக்தர், தோள்பட்டைக் காயம் காரணமாக இந்திய பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பிடிக்கவில்லை. சமீபத்தில் நடந்த அவுஸ்ரேலியப் பயணத்தின் போது, அக்தர் மீது பல்வேறு வகையில் குற்றஞ் சுமத்தப்பட்டது.

இதுதொடர்பாக அவரிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது. இந்த விசாரணைக்குப் பின்னர் அக்தருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதற்கு அடுத்த நாளே தன்னுடைய உடற்தகுதி சரியில்லை என்று அக்தர் அறிவித்தார்.

இந்த நிலையில் ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம்பிடிக்க விருப்பமுடன் காத்திருப்பதாக அக்தர் கூறினார். இதற்குப் பதிலளித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை - ஒருநாள் போட்டிக்கு முன்பாக உடற்தகுதியை நிரூபித்தால், அக்தருக்கு அணியில் இடம் கிடைக்கும் என்று புதிய நிபந்தனையை விதித்துள்ளது.

## தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து தரவரிசையில் நிலைக்குமா?

சிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெறும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 3-0 என்ற கணக்கில் வென்றால், சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து 5ஆவது இடத்தைப் பிடிக்கமுடியும் என்ற நிலையில் தென்னாபிரிக்கா உள்ளது.

இந்தத் தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் 4-1 என்ற கணக்கில் வென்றதன் மூலம் 101 புள்ளிகளிலிருந்து உயர்ந்து 106 புள்ளிகளுடன் தரவரிசையில் 5ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவுள்ளது.

சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் ஒரு ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும், ஒரு புள்ளி குறைந்து 6ஆவது இடத்துக்கு தென்னாபிரிக்கா தள்ளப்படும்.

அதேபோல் தொடர்ந்து தரவரிசைப் பட்டியலில் 2ஆவது இடத்தில் நிலைக்க அவுஸ்ரேலியாவுக்கு எதிராக மீதமுள்ள 2 ஆட்டங்களில் ஒன்றில் வென்றாக வேண்டிய நிலையில் நியூஸிலாந்து உள்ளது.

2007ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிக்கான தரவரிசை, 2005 ஏப்ரல் 1ஆம் திகதி பட்டியலின் அடிப்படையில் அமையவுள்ளது. அதன்படி 2ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டிய நிலையில் நியூஸிலாந்து உள்ளது.

பெப்ரவரி 24ஆம் திகதி நிலவரப்படி தரவரிசைப் பட்டியல் வருமாறு -

அவுஸ்ரேலியா -139, நியூஸிலாந்து -118, இலங்கை -117, பாகிஸ்தான் -109, தென்னாபிரிக்கா -106, மேற்கிந்தியத் தீவுகள் -105, இங்கிலாந்து -103, இந்தியா-98, சிம்பாப்வே -51, கென்யா -26, பங்களாதேஷ் -11.

# 165 ஓட்டங்களால் சிம்பாப்வே தென்னாபிரிக்காவிடம் தோல்வி!

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள சிம்பாப்வே அணி, அங்கு முதல் ஒருநாள் போட்டியில் 165 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.

நேற்றுமுன்தினம் ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

சிமித் - பச்சர் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடியாக இணைந்து - நிதானமாக நிலைத்துநின்று ஆடினர். அணியின் ஸ்கோர் 87ஆக உயரும்போதே சிம்பாப்வே வீரர்களால் முதல் விக்கெட்டை வீழ்த்தமுடிந்தது.

55 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிமித் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்த பின்னர், பச்சருடன் ரூடொல்ப் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடியும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஸ்கோர் 128ஆக உயர்ந்த போது- பச்சர் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து ரூடொல்புடன் கிப்ஸ் இணைந்து கொண்டு - அணியின் ஸ்கோரை 184ஆக உயர்த்தினார்.

அந்தவேளை, 61 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்திசெய்த ரூடொல்ப் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த கெம்ப் 8 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப, பௌச்சர் களம் புகுந்தார்.



எனினும் 40 ஓட்டங்களுடன் கிப்ஸ் ஆட்டமிழக்க, பிறின்ஸ் களமிறக்கப்பட்டார். இந்த நிலையில் ஸ்கோர் 276ஆக உயர்ந்தபோது - அதிரடி ஆட்டம் ஆடிய பௌச்சர் ஆட்ட மிழக்க நேரிட்டது.

29 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்சர்களுடன் 49 ஓட்டங்களை பௌச்சர் பெற்றார். இவரையடுத்து மோர்க்கெல் 6 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன், 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

## விளையாட்டு

தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களை எடுத்தது. போயே 4 ஓட்டங்களுடனும், பிறின்ஸ் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் உற்செயா -3, பன்யங்கார, சிக்கும்பரா, மற்சிகென்யேரி, ரோஜர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து கடினமான இலக்குடன் சிம்பாப்வே அணி களமிறங்கியது. சிம்பாப்வே அணி வீரர்கள் பெரிதாக நிலைத்து நின்று ஆடாமல் - அடுத்தடுத்து சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர்.

ரோஜர் -1, மசகட்சா-10, மற்சிகென்யேரி-25, ரெய்லர் -3, மரெக்வெடே -16, சிகும்பரா -0, வில்லியம்ஸ் -12, தைபு -28, பன்யங்கார -9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

சிம்பாப்வே வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்காமல் பந்துகளை வீணடித்ததால் - 50 ஓவர்கள் வரை தாக்குப் பிடித்தனர். ஆட்டநேரமுடிவில் சிம்பாப்வே அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 165 ஓட்டங்களால் தோல்வி காணநேரிட்டது.


பந்துவீச்சில் என்ரினி - 3, ஹேறால் -2, மோர்க்கெல் -2, போயே -1 விக்கெட்டை வீழ்த்தினர்.

# 20 வருடங்களாக மின் விநியோகம் இல்லை: புங்குடுதீவு மக்கள் கடும் விசனம் தெரிவிப்பு!

புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு நீண்ட காலமாக மின்சாரம் வழங்கப்படாமையால், அந்தப் பிரதேச மக்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.1985 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்று வரை புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறது.

இதேவேளை – அந்தப் பகுதி வைத்தியசாலையிலும் கூட மின்சாரம் இன்மையால், பெறுமதிவாய்ந்த மருந்துகளை குளிர் சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக நோயாளர்கள் அங்கு சிகிச்சை பெற முடியாது – யாழ். போதனா வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காகச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே புங்குடுதீவு வாழ்மக்கள் மின்சாரத் தேவையைக் கருத்திற் கொண்டு, இதனோடு சம்பந்தப்பட்டவர்களும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (100)



கலாபூஷணம் பட்டம் பெற்ற ஆசாரி கெங்காதரனை குருநகர் நண்பர்கள் கௌரவித்த நிகழ்வில் மற்றாஸ்மயில் பரிசில் வழங்குவதையும் கலைஞர்கள் கி. கிறிஸ்தோப்பர் (ஜே.பி), ஜேசுதாசன் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம். (206)

# போதிய நிதிவசதிகளின்மையால் வீதி விளக்கு பொருத்துவதில் தாமதம்!

(யாழ்ப்பாணம்)

போதிய நிதிவசதி இன்மையாலேயே சாவகச் சேரி நகரசபை எல்லைக்குட்டபட்ட பகுதிகள் முழுவதற்கும் வீதி விளக்குகளைப் பொருத்த முடியவில்லை என சாவகச்சேரி நகரசபை செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பகுதிக்கான வீதி விளக்குகள் பொருத்துவது சம்பந்தமாக அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த அரசால் துரித அபிவிருத்தித்திட்டத் தின் கீழ் சாவகச்சேரி நகரசபைக்கு நிதி ஒதுக்கப் பட்ட போதும் குறிப்பிட்ட நிதி நகரசபைக்கு வழங்கப்படவில்லை.

அத்துடன், சாவகச்சேரி நகரசபை ஊழியர்களுக்கும் கடந்த கால சம்பளப் நிலுவைப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைவிட சந்தை வருமானமும் மிகக்குறைவாக இருக்கிறது.

அத்துடன் வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. மேலும் இதுசம்மந்தமாக பொது அமைப்புகளுடன் கலந்துரையாடியும் பயன் ஏதும் இல்லை எனவும் தெரிவித்த அவர் –

வீதி விளக்குகள் பொருத்தும் திட்டத்துக்கு 10 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், ஆனால், நகரசபை வருமானம் இதற்கு போதியனவாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு பாடசாலைகளிடையே வினாடிவினா போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு – தமிழீழ மாணவர் அமைப்பினால் பாடசாலைகளுக்கிடையில் வினாடிவினாப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புடன் தொடர்பு கொண்டு, விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து ஒரு அணிமட்டுமே பங்கு பற்றலாம்.

வெற்றிபெறும் முதல் 3 அணிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன், முதல் இடம் பெறும் அணியின் போட்டியாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப் படுவார்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி 06.03.2005 ஆகும்.

# மணற்காடு றோ.க. பாடசாலைக்கு கொட்டகை அமைக்குமாறு கோரிக்கை

(நெல்லியடி)

சுனாமியால் பாதிப்படைந்து முற்றாக அழிந்து போன மணல்காடு ரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை தற்போது குடத்தனைப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுடன் இணைந்தே செயற்படுகின்றது.

இதனால் மாணவர்களின் கற்றல் நிலை பாதிப்படைவதுடன் மாணவர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர் நோக்குகின்றனர். இதனால் மாணவர்கள் விசனம் அடைந்துள்ளதுடன் தமக்கான பாடசாலையை மீளபுனரமைத்து தற்காலிக கொட்டகைகள் அமைத்து தருமாறு அரச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (12)

# குன்றும் குழியுமாக உள்ள வீதியை உடன் திருத்துக!

## மாவடி – மூளாய் மக்கள் கோரிக்கை

(மானிப்பாய்)

மாவடி –மூளாய் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனை உடன் திருத்தயமைக்குமாறு வலி.மேற்கு சங்கானைப் பிரதேச சபையிடமும், வீதிப்போக்குவரத்து அதிகார சபையிடமும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

786ஆம் இலக்க யாழ் – காரைநகர் பயணிகள் பஸ் போக்குவரத்துச் சேவை இந்த வீதியினூடாக இடம் பெற்றுவருகிறது. கடந்த மாரி பெருமழையின் போது இந்த வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

வலி.மேற்கு சங்கானை பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதி கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட போதும், மீண்டும் பாரிய குன்று குழிகள் தோன்றி சேதமடைந்துள்ளது.

இதனால் பயணிகள் பஸ் சேவை பாடசாலை மாணவர்களது பஸ்சேவை, தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களெனப்பலரும் பாவிக்கும் இந்த வீதியை உடனடியாகச் செப்பனிட்டு புனரமைக்க வேண்டுமென பொதுமக்கள சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (100)

# பாதுகாப்பு உரிமம் தொடர்பான கூட்டம்

சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கல் தொடர்பான மதிப்பீட்டு குழுவினருக்கும், தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவினருக்குமான கூட்டம் – எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்று நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (63)

# சேதமடைந்த காவலரண்களை திருத்தியமைக்கும் படையினர்!

(தாளையடி)

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வடமராட்சி கிழக்கு கடற்கரையோரக்கிராமங்களில் சேதமடைந்த காவலரண்களை மீளத் திருத்துவதிலும், புதிய காவலரண்களை அமைக்கும் பணிகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எதிரே கடற் கரையோரமாக முட்கம்பிவேலிகள் அமைத்து, அதனுள் காவலரண்களையும் தாம் தங்குவதற்கு வசதியாக தகரத்திலான தங்குமிடங்களையும் படையினர் வெகுவேகமாக அமைப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (21)

# கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIIஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை – எதிர்வரும் மே மாதத்தில் கொழும்பில் நடைபெறுமென கல்வியமைச்சின் செயலாளர் தாரா டீ மெல் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்தரமுல்ல பெலவத்தைஎன்ற முகவரிக்கு அலுவலரின் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். கடிதவுறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப் படுதல் வேண்டும்.

இந்தப் பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் மற்றும் ஏனைய விதிகள் கடந்த 15.10.1986 ஆம் ஆண்டுகள் கடந்த அரச அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளின் வசதிக்காக அந்தப் பாட விதானங்கள் மற்றும் ஏனைய விதிகள் கடந்த 25ஆம் திகதிய அரச வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (100)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி!

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அளவெட்டியைச் சேர்ந்த எஸ்.கணேசானந்தம் என்பவர் ஐம்பதாயிரம் ரூபாவை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியியல்துறையினரிடம் கையளித்துள்ளார். ஆபிரிக்க நாடொன்றில் பொறியியலாளராக கடமையாற்றி வரும் இவர் தனது உறவினர்கள் மூலமாக இந்த நிதியுதவியை கையளித்துள்ளார்.

இவரது செயலைப் பாராட்டிய அரசியற்துறையினர் இவ்வாறு வசதிபடைத்தோர் உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என கேட்டுக் கொண்டனர். (94)

# மெய்வன்மை போட்டி

பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம் நடத்தும் 46 ஆவது வருட இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு தலைவர் கங்காபதி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

# பொதுக் கூட்டம்

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் – இன்று பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (63)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## இரண்டாவது அகவையில்



பெயர் : த. வேஜினி
முகவரி : ஆனைக்கோட்டை

## நான்காவது அகவையில்



பெயர் : க. சுபாங்கி
முகவரி : கிராம்புவில்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# வடமராட்சி வடக்கில் 3007 வீடுகள் சேதம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் 3007 வீடுகள் சேதமடைந்திருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 981 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்திருப்பதுடன், 2026 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத் தில் 4ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

# 273 தொண்டர் படையினருக்கு விசேட காலாற்படைப் பயிற்சி!

எழுதுமட்டுவாளில் உள்ள இராணுவத்தின் மேலதிக தரைப் படை நடவடிக்கை வான் தாக்குதல் பயிற்சிப் பாடசாலையில் – முதன் முறையாக தொண்டர் படையைச் சேர்ந்த 8 அதிகாரிகள் மற்றும் 265 படையினர் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

மேற்படி மேலதிக தரைப்படை பிளாட்டூன் பயிற்சிப் பாடசாலையில் இதற்கு முன்னர் பத்து பிரிவுகளாக – யாழ். குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் இராணுவ நிரந்தரப்படைப் பிரிவுகளைச் சேர்ந்த படையினருக்கு பயிற்சிகள் வழங்கப் பட்டன.

பதினோராவது பிரிவிலேயே தொண்டர் படையைச் சேர்ந்த 273 படையினருக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களின் ஒருமாதகால பயிற்சி நிறைவு விழாவும், அணிவகுப்பும் எழுதுமட்டுவாளில் நடைபெற்றன.

இந்தப் பயிற்சிகளை வான் தாக்கு தல் பிரிகேட்டைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் வழங்கியிருந்தனர்.

இதில் தொண்டர் படைப்பிரிவுகளான 7 வது கவசப்படைப்பிரிவு ,7 வது இலகு காலாற்படைப்பிரிவு, 11 வது கஜபா படைப்பிரிவு, 15 வது கஜபாபடைப் பிரிவு, 2வது, 3வது, 10வது, 12வது விஜயபாகு காலாற் படைப்பிரிவுகள் என்பனவற்றைச் சேர்ந்த 273 படையினரே இந்த விசேட பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளனர்.

53 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டபிள்யூ. யு. பி எதிரிசிங்க தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் – சிரேஷ்ட படையதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.




# பிரிந்து செல்லும் அன்றில்கள்



அப்ரிடி
இரை தேடுகிறேன்

இந்திய –
பலம் பலவீனம்
இந்த நிலை
நிலைமை சற்று வித்தி
ஏனெனில் அண்
டெஸ்ட் போட்டிகளில்
இதில் 2 ஆவது டெஸ்ட்
வர் இன்ஸமாம்
யிலிருந்து விலகி
பற்றிய ஒரு நாள்
வெற்றியைத் தவிர
த்தலைவர் பதவியி
நியமிக்க வேண்டு
முன்னாள் முன்
பயணத்தில் பாகிஸ்
களான சொகைப்
மஃமூட் ஆகியோர்
ணங்களில் பாகிஸ்
இந்தியா வரு

பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் என்பது ஒரு வரலாறு தான்.
என்று இரண்டு அணிகளையும் ஒப்பிட்டால் –
யில் பாகிஸ்தான் அணி இம்முறை இந்தியா வரும்
யாசமானது.

மையில் அவுஸ்ரேலியாவில் நடை பெற்ற 3
3;0 என தொடரை பாகிஸ்தான் இழந்தமை,
நடைபெற இருந்தவேளை அணித் தலை
திடீரென முதுகுவலியெனக் கூறி போட்டி
யமை, இதன் பின்னரான 3 நாடுகள் பங்கு
ஆட்டங்களில் பாகிஸ்தானின் ஓரிரண்டு
மோசமான ஆட்டம் என்பவற்றுடன், அணி
லிருந்து இன்ஸமாமை நீக்கிவிட்டு யுனிஸ் கானை
மென இம்ரான் கான் போன்ற பாகிஸ்தானின்
னணி வீரர்கள் குரல் கொடுத்தமை, இந்திய
தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர்
அக்தர், அப்துல் ரசாக் மற்றும் அசார்
இடம் பெறாமை போன்ற பல்வேறு கார
தான் அணி சிக்கித் தவிக்கையில்
கின்றது.

இதனுடன் அண்மைக் காலமாக பாகிஸ்தான் அணியில் ஆரம்ப துடுப் பாட்ட வீரர்களின் அணிக்கான பங்களிப்பு கனதி குறைந்தே காண ப்படுகிறது. இதில் சயீட் அன்வர் அப் ரிடி ஜோடி சிறந்ததொரு அடித் தளத்தை முன்னர் பாகிஸ்தான் அணிக்கு வழங்கியது. இதன் பின்னர் சயீட் அன்வர் ஓய்வு பெறவும் அப்ரிடியின் ஆட்டம் சோபிக்காத காரணத்தால் அணியிலிருந்து நீக்கப்படவும் இந்த ஆரம்ப ஜோடிக்குப் பின் வந்த எந்தவொரு ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாலும் பாகிஸ்தான் அணிக்கு கனதியான பங்களிப்பை வழங்க முடியாமல் போனதுடன் குறுகிய காலத்துக்குள்ளேயே இந்த ஆரம்ப ஜோடிகளை மாற்றிய நிலையையும் நாம் அவதானிக் கலாம்.



சல்மான் பட்
பிரியாத வரம் வேண்டும்

அன்வர்-அப்ரிடி ஆரம்ப இணைப் பாட்டத்துக்குப் பின் வந்த இம்ரான் நசீர்-தௌபீக் உமர், யாசிர் ஹமிட் -இம்ரான் பர்கத், சல்மான்பட் -யாசிர் ஹமிட் மற்றும் சல்மான்பட் -கம்ரன் அக்மல் என்ற ஆரம்ப இணைப்பாட்டக்காரர்களால் பெரிதாக அணி எதையும் சாதித்ததாக இல்லை. அத்துடன் இவர்கள் வந்த வேகத்தில் ஓரிரண்டு சதங்களையும், அரைச் சதங்களையும் பெற்றாலும் பின்னரான போட்டிகளில் இவர்கள் சோபிக்கத் தவறியவர்களாகவே காண ப்பட்டனர். இதில்இம்ரான் நசீர், தௌபீக் உமர், இம்ரான் பர்கத் ஆகியோர் காணா மற் போகும் நிலையிலுள்ளனர். ஆரம்ப ஆட்டக்காரராக வந்த யாசிர் ஹமிட் முதலாவது இரண்டாவது வீரராக தற் போது களமிறக்கப்படுகிறார்.

இவ்வாறான நிலையில் முன்னர் சோபிக்கத்தவறிய அப்ரிடி தற்போது மீளவும் அணியில் இணைக்கப்பட்டு பிரகாசிக்கத்தொடங்கியுள்ளார். ஆனால் ஒரு நாள் போட்டியில் ஆரம்ப வீரராக வந்த இவரை 6 ஆவது வீரராக் அணி களமிறக்குவது ஏனோ தெரியவில்லை. ஏனெனில் ஒருநாள் போட்டிகளில் முதல் 15 ஓவர்களுக்குள் அணி ஓட்டங்களைக் குவித்தால் பின்னர் வரும் ஆட்டக்காரர்கள் அழுத்தமின்றி விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லலாம். எனவே மீளவும் அப்ரிடியை ஆரம்ப வீரராக களமிறக்குவது தான் பாகிஸ்தான் அணிக்கு நன்மையாக அமையும்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி இந்தியாவில் சாதித்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இல்லையெனில் இன்ஸமாமின் தலைமைப் பதவிக்கு வேட்டு வைக்கப்படும். ஏனெனில் துணைத்தலைவர் பதவியிலிருந்த யுகானா நீக்கப்பட்டு, யுனிஸ்கான் நியமிக்க ப்பட்டதும் இந்த அர்த்தத்தில் தான்.

இருந்த போதிலும் இந்திய அணியுடன் மோதல் என்று வந்து விட்டாலே, பாகிஸ்தான் அணி மூர்க்கத்தனமான ஆட்டத்தை வெளிப்படுத்துவது கடந்த காலங்களில் நிரூபிக் கப்பட்டே வந்துள்ளது. இந்த வகையில் தற்போது இன்ஸமாம் தலைமையில் வரும் அணியும், சாதித்தாக வேண்டிய நிலையிலேயே உள்ளது. இது சாத்தியப்படுமா என்பதே இன்றுள்ள பிரதான வினாவாகும்?

– யசோ.

# அக்கரைகள் சகதிதான்

சரிவர ஆராயாமல் ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்று முன்னோர் சொன்னது நிரம்பச் சரிபோலத்தான் தெரிகிறது. நியூசிலாந்தில் நடைபெறும் கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்க்கும் போது ரசிகர்கள் மைதானங்களின் அழகையும், பச்சைப் பசேலென்ற சரிவான புற்றரைகளில் ரசிகர்கள் அமர்ந்திருப்பதையும், ரசிகர்களுக்கும், மைதானத்துக்கும் இடையில் தடுப்பு வேலிகள் எதுவும் காணப் படாமையும், ஆட்ட இடை வேளையின் போது சிறுவர்கள் மைதானத்தின் ஓரங்களில் கிரிக்கெட் விளையாடுவதும் – இப்படியான காட்சிகளால் நியூசி லாந்து ரசிகர்கள் தொடர்பில் வித்தியாசமான படிமம் ஒன்றே ஆசிய ரசிகர்கள் மத்தியில் படிந்தி ருந்தது.



ரீக்கி பொண்டிங்
திருந்தி நடவுங்கள்

ஆனால் இந்த எண்ணம் தவறு என்பது போலத் தெரிகிறது. கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற சில சம்பவங்களைக் குறித்து ரிக்கி பொண்டிங் பேசும் போது, நியூசிலாந்து ரசிகர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதை நியூசிலாந்து கிரிக்கெட் சபை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதாவது அவுஸ்ரேலிய வேகப் பந்து வீச்சாளர் கிளென் மக்ரா மற்றும் சைமன் கட்டிச் போன்றவர்கள் பிளாஸ்ரிக் போத்தல்களால் தாக்கப் பட்டிருக்கிறார்கள். அனேகமாக எல்லா வீரர்களுமே இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை இவர்கள் நடுவரிடம் முறையிடச் செல்ல, அதனால் பல தடவை ஆட்டம் இடை நிறுத்தப்பட்டி ருக்கிறது.



சைமன் கட்டிச்
அநாகரிகம்

பொண்டிங் அச்சப்படுவதாகத் தெரி கிறது. நீர் நிறைந்த பெரிய பிளாஸ்ரிக் போத்தல் பிடரிப் பக்கத்திலோ அல்லது கண்களையோ தாக்கு மாயின் வீரருக்குப் பாரிய பாதிப்பு ஏற்படும் என்று அச்சப் படுகிறார். அத்தோடு மைதான எல்லைக் கோட்டை அண்டி பரவலாகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார் அவர். நிலைமை மோசமானால் பொலிஸாரை வரவழைக் கும் அதிகாரமும் அவர்களுக்கு இருக்கவேண்டும் என்கி றார் பொண்டிங்.


பொதுவாக இந்திய ,பாகிஸ்தான், இலங்கை மைதானங் களில் மைதானத் தடுப்பு வலைகளின் ஊடாகத்தான் ரசிகர்கள் ஆட்டங்களை ரசிக்கும் நிலைமை ஒன்றும் புதியவையல்ல. சில வேளைகளில் ரசிகர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் போனமைதான் மைதானங்களில் கம்பிவலை வேலிகள் படிப்படியாக ஆக்கிரமித்து வருகின்றன என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. ஆனால் அத்தகைய தேவைகள் எதுவும் நியூசிலாந்து மைதானங்களில் தேவைப்படுவதில்லை என்பதில் இருந்து, ரசிகர்களின் நடத்தை வேறுபாடுகளை உணர்ந்து கொள்ள முடியும் என்று நினைத்தால், நினைப்பு தவறானது என்ற முடிவுக்கு வரத்தோன்றுகிறது. அவர்கள் ஒன்றும் இவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபிக்க முயல்வது போலத் தெரிகிறது. இது கனவான்கள் ஆட்டத்துக்கு ஒரு கரும்புள்ளிதான்.

இதே விடயம்
பயிற்றுனர் ஜோன்
மாகக் கருத்துக் கூறுகி
அங்கு செய்ததைத்தான்
கிறார்கள். இதில் ஒன்றும்
கிறார் அவர்.

இன்னொரு கருத்து வித்தியா
கிறது. முதலாவது ஒருநாள்
யில் ஹேர்மிஷ் மார்ஷல் நியூசி
யின் விளிம்புக்குள் கொண்டு வந்த
ரது concentration ஐ குலைப்பது போல்
அணியினர் ஆட்டத்தை நிறுத்த, சீரான மனநிலை குலைந்த மார்ஷல் ஆட்டம் மீளத் தொடங்கிய போது, எழுபத்தாறு ஓட்டங் களுடன் மக்ராவின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க நியூசிலாந்தும் தோல்வியைச் சந்தித்தது. இதெல் லாம் மறைமுகமாக வெற்றியைப் பறிக்கும் அவுஸ்ரேலியாவின் வியூ கங்கள் தான் என்கிறார்கள் நியூசி லாந்து ரசிகர்கள். சிந்திக்க வேண்டிய விடயம் தான்.

தொடர்பில் நியூசிலாந்து
பிரெஸ்வெல் வேறு வித
றார். அவுஸ்ரேலியர்கள்
இவர்கள் இங்கு செய்
ஆச்சரியமில்லை என்

சமானதாகத் தெரி
கிரிக்கெட் போட்டி
லாந்தை வெற்றி
வேளையில், அவ
அவுஸ்ரேலிய
அதனால்



பிளெமிங்
முதலில் நீங்க
திருந்தனும்

- ஜோசப் கிருஷ்ணா.

# கைப்பற்ற மூன்று வருடங்கள்



ஜெப்ரெலாஸி
எனக்கே
வேண்டும்


எதியோப்பிய நாட்டின் நெடுந்தூர சகாப்தம் ஹெய்லி ஜெப்ர செலாஸி .இவர் இரண்டுமுறை பத்தாயிரம் மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் ஒலிம்பிக் பதக்கம் வென்றவர்.இவரது எதிர்கால இலக் குகளில் ஒன்று அடுத்தமூன்று வருடங்களுக்குத் தொடர்ந்து மிகப்புகழ் பெற்ற லண்டன் மரதன் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதாகும் .

அண்மையில் சத்திரசிகிச்சை ஒன்றுக்குட்பட்ட ஜெப்ர செலாஸி கடந்த வாரம் ஸ்பானியாவில் நடைபெற்ற HALF MARATITON போட்டியொன்றில் வெற்றி பெற்றவர். இவர் லண்டன் மரதன் போட்டிகளில் தீவிர ஆர்வத்துடன் கலந்து கொண்டது 2002இல்.இந்தச்சந்தர்ப்பத்தில் இவரால் மூன்றாம் இடமே பெற்றுக்கொள்ள முடிந்தது. லண்டன் மரதன் ஏற்பாட்டாளர்கள் இவரது மூன்று வருட இலக்குப் பற்றி பேசும் போது– இவரது கூற்று லண்டன் மரதன் ஓட்டப் போட்டிகளுக்கு ஒரு கனதியைக் கொடுத்துள்ளது.

அதோடு மிகத்தரமான வீரர்களின் பங்களிப்புக் கான வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார்கள். எனவே இங்கு ஒலிம்பிக் சம்பியன் ஸ்ரெவானோ பல்டினி உலகச் சம்பியன் ஜாவுட் காரிப் மற்றும் தற்போ தைய உலக சாதனை நேரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள போல் ரேர்கட் ஆகியோரை எதிர்கொள்ளும் நிலைக்கு ஜெப்ர லாஸி தள்ளப்படுகிறார்.

என்னால் வெல்ல முடியாது என்று எண்ணியிருந்தால் நான் இங்கு வந்திருக்கமாட்டேன்.மிகச்சிறந்த வீரர்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்துள்ளது.அதனைச் சரியாகப் பயன்படுத்து வேன் என்பவர், இதுவரை பதினெட்டு முறை உலகசாதனை நிலை நாட்டியிருக்கிறார்.லண்டன் மரதன் கிரீடத்தையும் சூடிக்கொள்வது இவரது தணியாத தாகம். இது அவருக்குப் பெரும் சவாலாக இருக்கப் போவதில்லை என்பது ரசிகர்களின் எண்ணம்.

– அன்ரனி



போல் ரேர்கட்
தனியுரிமையல்ல

# தவறிப்போன தெரிவுகளா?



ஷேவாக்
இது ஒரு
போர்க்காலம்

ஆறுஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ் தான் கிரிக்கெட் அணி முதன் முறையாக இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட நாளை இந்தியா வரவுள்ளது.

இந்தப் போட்டித்தொடரில் இந்தியாவே வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக கிரிக்கெட் விமர்சகர்களும், முன்னாள், இந்நாள்வீரர்களும் கருத்துத்தெரிவித்துள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் இந்தப் போட்டிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட மைதானங்கள் இந்தியாவின் வெற்றியைக் கேள்விக்குரியதாக்கி விட்டதோ? என்றொரு எண்ணம் பரவலாக தலை தூக்கியுள்ளது.

சொந்தநாட்டில் போட்டிகள் நடைபெறும் போது ஒவ்வொரு நாடும் தங்களுக்குச் சாதகமானதும், குறிப்பிட்ட அணியை கடந்த காலத்தில் சந்தித்த போது பெறப்பட்ட வெற்றி தோல்விகளையும் கருத்திற் கொண்டே போட்டி அட்டவணையைத் தயாரிக்கும்.

உதாரணத்துக்கு அவுஸ்ரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் சென்னையில் ஒரு போட்டி நடத்துவது வழக்கம் .காரணம் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற பலபோட்டிமுடிவுகள் இந்தியாவுக்கு சாதகமாகவே அமைவதனாலாகும்.

அந்தவகையில் பார்க்கும் பொழுது இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டிகள் மொஹாலி, கொல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இதில் கொல்கத்தாவை பொறுத்தவரை பாகிஸ்தான் கடைசியாக 1999ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய டெஸ்ட் போட்டியிலும்சரி ,இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழா ஒருநாள்போட்டியிலும்சரி இந்தியா தோல்வியே அடைந்திருந்தது.இந்திய ரசிகர்களைப் பொறுத்தவரையில் கொல்கத்தாவில் இந்தியா பாகிஸ்தானை சந்திப்பதை விரும்பமாட்டார்கள்.

இந்தவகையில் டெல்கி பெரோஷா கோட்லா மைதானம் இந்தியாவுக்குச் சாதகமானது. இந்த பாகிஸ்தானுக்கு எதி கனை கைப்பற்றிசாதனை



யாசீர் ஹமீட்
நிறையவே
நினைக்கிறேன்

மைதானத்திலேயே அனில் கும்ளே ராக ஒருஇனிங்சில் பத்து விக்கெட்டுக் படைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த மைதானத்தில் டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக ஒருநாள்போட்டியே நடைபெறவுள்ளது. டெஸ்ட் போட்டிகளுக்கான மைதானக் கோட்டா அடிப்படையில் பார்த்தால்கூட, 2001-02 காலப் பகுதியில் சிம்பாப்வேக்கு எதிராக டெல்கியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் பின்னர் எந்த டெஸ்ட் போட்டியும் இதுவரை இங்கு நடைபெற்றதில்லை. எனவே பாதுகாப்பின்மையை காரணம் காட்டி அகமதாபாத் டெஸ்ட் போட்டியை கொல்கத்தாவுக்கு மாற்றியதற்குப் பதிலாக அந்தப் போட்டியை டெல்கிக்கு மாற்றியிருக்கலாம்.

ஆனால் நாரதர் கலகம் நன்மையில் முடிவது மாதிரி, பாகிஸ்தான் எழுப்பிய பாதுகாப்பு சர்ச்சை ஒருநாள் போட்டியொன்றை அதிகரிக்கச்செய்துள்ளது. இது ரசிகர்களுக்கு போனஸ் விருந்து தான்.

இந்தியாவிலுள்ள மைதானங்களில் பெரும்பாலானவை சுழற்பந்து வீச்சுக்கு சாதகமானவை, சொந்தமண்ணில் இந்திய அணியின் பலமே சுழற்பந்து வீச்சில் தான் தங்கியுள்ளது.அப்படிப்பட்ட சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான மைதானங்களை விடுத்து, இந்தியாவிலேயே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உகந்த ஒரேயொரு மைதானமான மொஹாலியில் முதலாவது டெஸ்ட் நடைபெறவுள்ளதைப் பார்க்கும் பொழுது, யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டதைப் போலுள்ளது.

ஒப்பீட்டுரீதியில் இந்திய அணியின் வேகப்பந்துவீச்சைவிட பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சு பலம் கொண்டது, அக்தர் இல்லாமலே அவுஸ்ரேலியாவை VB கிண்ண இறுதிப் போட்டிகளில் 240 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியமை அவர்களின் பந்துவீச்சுப்பலத்தையே எடுத்துக்காட்டுகிறது என்ற ஷேவாக்கின் கூற்றிலும் உண்மை இல்லாமலில்லை.

அத்துடன் பாகிஸ்தான் அணியில் இளம் வீரர்களே அதிகம் காணப்பட்டாலும், சல்மான் பட், கம்ரன் அக்மல் போன்ற சுள்ளான்கள் எந்தவேளையிலும் ஆட்டத்தை திசைதிருப்பும் வல்லமை படைத்தவர்களாகவே காணப்படுகின்றனர்.இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழா போட்டியில் சல்மான் பட் அடித்த சதமும், VB கிண்ணத்தில் கம்ரன் அக்மல் அடித்த சதமும் இதைப் புலப்படுத்தியே நிற்கிறது. எதுஎப்படியோ ஒன்றரை மாதங்களுக்கு கிரிக்கெட் ரசிகர்களுக்கு திருவிழாதான்.

- விமலன்.

# தொடங்குவது வசந்தகாலம்



பீபனோவா
மேகம் குளிர்கிறது

சில தினங்களுக்கு முன்னர் 100மீற்றர் ஓட்ட உலக சாதனை வீரர் மொறிஸ் கிறீன் பற்றிய செய்தி கருத்தைக் கவருவதாக இருந்தது. தான் விட்ட தவறுகளால் ஏதென்ஸ் 100 மீற்றர் தங்கத்தைத் தவறவிட்டதாகவும், ஆனால் சீன ஒலிம்பிக் போட்டிகளில் தவறுகள் திருத் தப்படும் என்றும் கூறியிருந்தார். ஆனால் சில தினங்களுக்கு முன் இங்கிலாந்தின் பேர்மிங்ஹம் நகரில் நடைபெற்ற உள்ளக தடகளப் போட்டிகளில் 60 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாவது இடமே அவரால் பெற முடிந்தது. தனது சக நாட்டவரான லெனார்ட் ஸ்ஹொட் 6.49 செக்கனில் முதலிடம் பெற சென்.கிட்ஸ்-நெவிஸ் தீவுகளைச் சேர்ந்த கிம் கொலின்ஸ் இரண்டாம் இடம் பெற்றார்.



மொறிஸ் கிறீன்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்

இதில் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் போர்த்துக்கல் நாட்டின் பிரான்சிஸ் ஒபெக்வெலு டிரினிடாட் நாட்டைச் சேர்ந்த மார்க் பின்ட்லே மற்றும் பிரித்தானியாவின் மார்க் லூயிஸ் பின்ட்லே ஆகியோர், ஆரம்பத் தவறுகளால் ஓட்டத்தில் பங்கேற்கும் தகுதியை இழந்தனர். இவர்களும் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டிருந்தால், மொறிஸ் கிறீனின் நிலை இன்னும் சரிந்திருக்குமோ, என்னமோ தெரியவில்லை. எதையும் இப்போதே அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும் சீன ஒலிம்பிக் போட்டிகளின் அதிவேக மனிதன் என்ற பட்டம் எல்லோருக்கும் உன்னத இலக்காக இருக்குமென்பது மட்டும் நிச்சயம் .

இதே வேளை ஏதென்ஸ் ஒலிம்பிக் 10000 மீற்றர் தங்கம் வென்ற எதியோப்பிய நாட்டின் கெனெனிசா பெகெலே இரண்டாம் இடமே பெற முடிந்தது. பெகெலே தனது தனிப்பட்ட வாழ்வின் துயரத்தில் இருந்து இன்னமும் மீளவில்லை என்பதையே இது காட்டுகிறது என்கிறார்கள் விமர்சகர்கள். கடந்த மாதம் ஒரு ஓட்ட நிகழ்வுப் பயிற்சிப்பட்டறையின் போது இவரது தோழி அலெம் டிச்சாலே மரணமடைந்து விட்டார். அந்தச் சோகம் இலகுவில் மறைந்து விடும் என்று எதிர் பார்ப்பதும் சரியல்லை.



இஸின் பயேவா
முகில்கள் பஞ்சு போன்றவை

ஆனால் கோலூன்றிப் பாய்தலில் ஒலிம்பிக் தங்கம் வென்ற ரஷ்யாவின் யெலினா-இஸின் பயேவா 4.88 மீற்றர் கடந்து முதலிடம் பெற்றார்.

இரண்டாம் இடம் பெற்றவர் ஸ்வெட்லானா பீபனோவா, முதலிரண்டு இடங்களையும் பெற்றவர்கள் ரஷ்யர்கள்.இவர்கள் கோலூன்றிப் பாய்தலில் பாரம்பரிய போட்டியாளர்கள்.எந்தப் பக்கம் திரும்பினாலும் ரஸ்ய பிரசன்னமாக இருப்பதும் மகிழ்ச்சிதான். இஸின் பயேவா கடந்த வருடம் பிரஸல்சில் நடைபெற்ற போட்டியொன்றில் 4.92 மீற்றர் கடந்தவர். இதுவே இந்த நிமடத்தின் உலக சாதனை. மேலும் கடந்த இரண்டு வருடங்களுக்குள் இவர் பதினொரு வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

- நிர்மலன்.

# நினைத்தது நடக்கவேண்டும்

– எனது தாயக மக்கள் நான் ஓடும்போது தரும் உற்சாகம் செய்ய இயலாதவற்றை எல்லாம் செய்யச் சொல்லும் என்கிறார் மிக மகிழ்ச்சியுடன்.



கெலி ஹோம்ஸ்
உங்கள் மீது எங்கள் பார்வை

ஒலிம்பிக் இரட்டைத் தங்க வீராங்கனை கெலி ஹோம்ஸ் பேர்மிங்ஹம் உள்ளகத் தடகளப்போட்டிகளில் 1000 மீற்றர் ஓட்டத்தில் மிக இலகுவாக வெற்றியைக் கண்டிருக்கிறார். முப்பத்திநான்கு வயதாகும்கெலி ஹோம்ஸ் இரண்டு நிமிடம் 35.39 செக்கன்களில் தனது வெற்றி இலக்கை அடைந்துள்ளார் .ஆனால் இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த தடகளப் போட்டிகள் அடுத்த மாதம் நான்காம் திகதி முதல் ஆறாம் திகதி வரை ஸ்பானியாவில் நடைபெறவுள்ளன.அது ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகள். நான் இந்தப்போட்டிகளில் கலந்துகொள்ள விண்ணப்பிப்பேன் என்றாலும் அது இறுதிநேர முடிவாகத்தான் இருக்கும். ஏனெனில் எனது பயிற்சிகள் நான் நினைத்த அளவுக்குத் திருப்திகரமாக அமைய வில்லை என்றே நினைக்கிறேன். நான் ஆறுதலாக யோசிக்க வேண்டும்.நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை தீர்க்கமாகத் தீர்மானிக்கப் வேண்டும் என்பவர், பேர்மிங்ஹம் வெற்றிபற்றிக் கருத்துக் கூறுகையில்

இதேவேளை 2012 ஒலிம்பிக் போட்டிகளை எப்படியாவது லண்டனில் நடத்திவிட அனுமதி பெறவேண்டும் என்று படாதபாடுபடுகிறது இங்கிலாந்து. அது தொடர்பான பரப்புரை நிகழ்ச்சிகளில் சர்வதேச ஒலிம்பிக்குழு அங்கத்தவர்களை திருப்திப் படுத்த தெரிவு செய்யப்பட்ட பிரித்தானியாவின் மூன்று உன்னத வீரர்களின் கெலிஹோம்சும் ஒருவர். இவரது திறமை இங்கிலாந்தில் மிக உயர்வாகத்தான் கணிக்கப்பட்டுள்ளது என்பதற்கு இந்த ஒரு சான்றே போதுமே.

- மக்டலின்.

விளையாட்டு அரங்கம்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு தமிழீழ காவற்துறை வேண்டுகோள்!

தமிழீழ காவற்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

அண்மைக்காலத்தில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கூடுதலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் சாரதிகளின் கவனயீனத்தாலும், வேகத்தினாலும், வீதிகள் அகலம் குறைவின் காரணத்தாலும் இடம்பெற்று வருகின்றன.

விபத்துக்கள் நடப்பதற்குக் காரணம் மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதியின் விதிமுறை களைப் பின்பற்றாது சாரத்தியம் செய்வதே ஆகும். இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதியின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

வீதியின் விதிமுறை எனக் கூறும்போது மோட்டார் சைக்கிளை வீதியின் இடதுபக்க மாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு வாகனத்தை முந்திச் செல்லும்போது வலது பக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும். இதேபோன்று இடது பக்கமாக மோட்டார் சைக்கிளில் செல்லும்போது தாங்கள் வீதியின் தார் விளிம்பிலிருந்து மூன்று அடிக்குள் செல்லுதல் வேண்டும். வீதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தும்போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பக்கம்பக்கமாகச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும்போது ஓடிக்கொண்டிருக்கும் இன்னொரு மோட்டார் சைக்கிளில் பிடித்துக்கொண்டு செல்லுதல் தவிர்க்கப்படவேண்டும்.

வீதியில் மோட்டார் சைக்கிள் செல்லும்போது பின்னால் வரும் வாகனங்களுக்கு வழிவிடாது நடு வீதியால் செல்வதைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனங்களை சந்திகளில், பாதசாரி கடைவைகளில், வளைவு நெளிவான இடங்களில் முந்திச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழையும்போது மோட்டார் சைக்கிளைக் கிளைவீதியில் நிறுத்தி, பிரதான வீதியின் வலதுபக்கமும் பார்த்து, பின் இடது பக்கமும் பார்த்துத் திருப்பவும். வலதுபக்கம் பார்த்து வலது பக்கங்களில் இருந்து வரும் வாகனங்களையும், இடது பக்கங்களில் இருந்துவரும் வாகனங்களையும் செல்ல அனுமதித்தபின் மோட்டார் சைக்கிளை பிரதான வீதிக்குள் இடையூறின்றி வீதியின் விதி முறைகளுக்கேற்ப செலுத்துதல் வேண்டும். மோட்டார் சைக்கிளில் பிரதான வீதியால் சென்று கிளைவீதிக்கோ அல்லது கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும்போது திசைக்கேற்ப நூறு அடிக்கு முன் சைகையை (லைற் சைகை, கைச்சைகை) தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது முன் பக்கத்தில் வெள்ளைநிற (முகப்பு வெளிச்சம்) வெளிச்சத் தையும், பின்பக்கத்தில் சிவப்புநிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்புநிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும். வெளிச்சமின்றிச் செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது முறையான கட்டுப் பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல் வேண் டும். மோட்டார் சைக்கிளில் மூன்றுபேர் அதற்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் செல்லும்போது வீதியில் தேவையற்ற பொருட்கள் மீது தங்கள் பார்வையைச் செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது மென்னிறஆடை அணிந்திருத்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும்போது, வீதியில் பணிக்கப்பட்ட வேகத்தைக் கடைப்பிடித்துச் செலுத்துதல் வேண்டும், பிரதான வீதியில் இருந்து இடது பக்கம் அல்லது வலது பக்கம் வரும் வீதிக்குத் திருப்பு வதற்காக இருந்தால், உங்கள் மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் வரும் வாகனங்கள் நேராகச்செல்லுமானால், அதற்கு வழி விடவேண்டும். மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும்போது மதுபோதையில் செலுத்து வதைத் தவிர்த்தல் வேண்டும்.

வீதியில் மோட்டார் சைக்கிள் செல்லுவதற்கு முன் மோட்டார் சைக்கிளின் பொறி முறைகள், விளக்குகள், ரயர், தடுப்புகள், ஒலிக்கருவிகள் என்பன சரியான முறையில் உள்ளதா என உறுதிப்படுத்துங்கள். இவற்றைக் கடைப்பிடித்து வீதி விபத்திலிருந்து உயிர் இழப்புக்களையும், உடமை இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப் பாளர் கேட்டுள்ளார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### பெப்ரவரி 27

1897 : பால்டிமோரிலுள்ள "ஜோன் ஹாப்கின்ஸ்" பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கொன்ஸ்டன்டைன் போல் பெர்க், பேராசிரியர் ஐரா ராம் ஸெல் ஆகிய இருவரும் "சக்கரினைக் கண்டுபிடித்தனர்.

1900 : லண்டனில் தொழிற்சங்க காங்கிரசும் சுயேட்சைத் தொழிற் கட்சியும் சேர்ந்து தொழிற்கட்சியாக இணைந்து கொண்டன.

1906: மிகக் குறைந்தளவு வெப்பநிலையை அளக்கக்கூடிய போலோ மீற்றரைக் கண்டுபிடித்தவரும், ஆளில்லாமல் பறக்கக்கூடிய விமானத்தை வடிவமைத்துப் பறக்கச்செய்து காட்டியவருமான அமெரிக்க விஞ்ஞானி சாம்யூல் பையர் பாய்ன்ட் லாங்லி இறந்தார்.

1917 : அமெரிக்காவில் ஜோன் பிரௌனிங் என்பவர் புதிய ரக இயந்திரத் துப்பாக்கி ஒன்றின் செயல்திறனை விளக்கிக் காட்டினார்.

1957 : "நறுமலர்கள் மலரட்டும் நூறு எண்ணங்கள் உதயமாகட்டும்" என்ற வேண்டுகோளை மாசேதுங் வெளியிட்டார்.

1966 : கடந்தவருடம் நவம்பரில் அனுப்பப்பட்ட வெனீரா – 2 என்ற விண்கலம் 24000 கி.மீ வரை வெள்ளிக்கிரகத்துக்கு அருகில் சென்றடைந்தது. ஆயினும் தகவல் குறிப்பு எதையும் அது அனுப்பிவைக்கவில்லை.

1973 : 1890 ஆம் ஆண்டு, ஆயிரக்கணக்கான செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்ட இடமான "வூண்டட் நீ" என்ற பிரதேசத்தை, செவ்விந்திய இயக்கத்தைச்சேர்ந்த சுமார் 300 தீவிரவாதிகள் கைப்பற்றிக்கொண்டனர்.

1980 : கொலம்பியாவில் கோட்டா எனும் இடத்தில் இடதுசாரி கெரில்லாக்கள் டொமினிகன் குடியரசு தூதரகத்தைக் கைப்பற்றி, 14 வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட 60 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டனர்.

1993 : நியூயோர்க் உலக வர்த்தக நிலையத்தில் கார் வெடிகுண்டு வெடித்தது.

*டொமினிக்கன் தேசிய நாள்.*

தொகுப்பு – சந்துரு

# லெப்டினன்ட் மஞ்சரியின் நினைவுக்கல் திரைநீக்கம்

கடந்த 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது, வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப்டினன்ட் மஞ்சரியின் வீரவணக்கநிகழ்வும், நினைவுக்கல் திரைநீக்கமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக வெலிக்கண்டலிலுள்ள மாவீரரின் இல்லத்தில் இருந்து அவரின் திருவுருவப் படம் அலங்கரிக்கப் பட்ட ஊர்தியில் கண்டாவளை மகா வித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, விசுவமடு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சீதாராம் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாலதி படையணியின் தளபதிகளில் ஒருவரான கோமதி ஏற்றி வைத்தார். ஈகச்சுடரை மாவீரரின் தாயார் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை மாவீரரின் சகோதரன் அணிவித்தார். நினைவுரையை கண்டாவளை பாடசாலை அதிபர், பெரியகுளம் கிராம சேவையாளர் மற்றும் மாலதி படையணியின் தளபதிகளில் ஒருவரான தர்சினி ஆகியோர் நிகழ்த்தினர்.

மாலை 4 மணிக்கு கனகபுரம் துயிலுமில்லத்தில் மாவீரரின் திருவுருவப்படம், நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா , மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஆகியோர் கலந்து கொண்டனர்




# பூநகரி-சங்குப்பிட்டி வீதி படுமோசமான நிலையில்

கிளிநொச்சி, பூநகரி – சங்குப்பிட்டி வீதி மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதி பூநகரி வாடியடிச் சந்திப் பகுதியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் நீளமான வீதியே இவ்வாறு சேதமடைந்த நிலையில் கணப்படுகிறது. இந்தவீதியில் வாடியடிச் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் மதகு ஒன்று வீதிக்கு குறுக்கே சேதம டைந்து காணப்படுகிறது.

இந்த வீதியின் ஊடாக நெற்புலவு,பரமன்கிராய், வில்லடி, வெட்டுக்காடு, கௌதாரி முனை, விநாசியோடை, கல்முனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்துச் செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வவுனியா மாவட்டத்தின் ஊடாக வாகனக் கடத்தல் அதிகரிப்பு

## வவுனியா பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு


(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் ஊடாக வாகனங்களைக் கடத்துவது மீண்டும் அதிகரித்திருப்பதாக, வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். கடந்த நான்கு நாட்களுக்குள் ஓமந்தை ஊடாக மூன்று வாகனங்களும், உயிலங்குளம் ஊடாக ஒரு வாகனமும் கடத்த முயன்ற போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு இருப்பதாக, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபய சிங்கபண்டா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை ஓமந்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப் பட்ட வாகனம் – 12.10.2004 அன்று நுவரெலியா பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டதுடன் அதன் சாரதி கொலை செய்யப் பட்டதாகவும், அந்த வாகனத்தின் இலக்கம் wp - hp -7031 ஆக இருந்தபோதும், தற்போது வாகனத்தின் இலக்கம் மாற்றப்பட்டு இருப்பதாகவும், புதிய இலக்கம் 252 – 2203 என மாற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான வாகனங்கள் கடத்தப்பட்டபோது, கடத்தப் பட்ட வாகனசாரதிகள் கைது செய்யப்பட்டு, விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும், இவ்வாறான கடத்தலுக்குக் குழு ஒன்று இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் நாடகக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம்



புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் நெஞ்சங்களின் விருப்பிற்கிணங்க, தமிழ் நாடகக் குழுவினர் நேற்று முன்தினம் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் கிளிநொச்சியில் இருந்து தரைவழியாகத் தமது பயணத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர். கதாசிரியர் புதுவை அன்பன், கதாசிரியர் பாலா ஆகியோரது நெறியாள்கையில் உருவாக்கம்பெற்ற கரைதேடும் ஓடங்கள், சூரிய தேவதையின் சோகங்கள் ஆகிய இரு நாடகங்களின் கலைஞர்களே சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பயணத்தை மேற் கொள்ளவுள்ளனர்.

இசையமைப்பாளர்கள் நாகேந்திரம்,குமணதாஸ், நாடகத் துறைக் கலைஞர்களான சதீஸ், சிவனேஸ்வரன், லோகநாதன், சுரேந்திரன்,முகுந்தன், தனபாலன், தியாகராசா, ஜயன், ராகினி, கலைமதி, ஜெஸ்மி, பிரியா, கவிதா, யோகராசா ஆகியோர் இந்தப் பயணத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

# அக்கராயன் பிரதேச பங்காளி நிறுவன பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அக்கராயன் பிரதேச பங்காளி நிறுவனங்களின் பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி உதயநகரில் அமைந்துள்ள வடக்கு – கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொது ஈகச்சுடர்களை கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறு வனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை பொன்.நித்தியானந்தன், இ.கணேசபிள்ளை, பூங்குன் றன், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைச்செயலாளர்,கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர், உதவிப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*கேழ்வரகில் நெய்வடிகிறதென்றால் கேட்பவர்க்கு புத்தி எங்கே போயிற்று.*

பழமொழி

# நமது நோக்கு

## முழுப் பூசினிக்காயை மறைக்கும் சந்திரிகா!

அரச படையினருடன் எந்தவொரு ஆயுதக் குழுவும் இணைந்து செயற்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா - நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்திருப்பதாக, ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களிடம் ஆயுதங்கள் களையப்பட்ட வேண்டும் என்று புரிந்துணர்வு, போர்நிறுத்த உடன்பாட்டின் 1.8 ஆவது சரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்தச் சரத்து விதியின்படி அரசாங்கம் - படையின ருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களிடம் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று, தமிழீழ அரசி யற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - எரிக் சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியிருந்தார்.

இதுகுறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரியப் படுத்தப்பட்டபோதே - அவர் ஆயுதக் குழுக்கள் எதுவும் படையினருடன் இணைந்து செயற்படவில்லை என்று நிராகரித்திருக்கிறார்.

அரச படைகள் காலம் காலமாக - ஆயுதக் குழுக் களை வைத்திருந்து தமிழ் மக்களுக்கெதிராகவும், புலிகளுக் கெதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள் ளன. இது ஒன்றும் இரகசியமானதல்ல.

நிலைமை அப்படியாயிருக்க, தமிழ் அமைப்புக்களிலி ருந்து பிரிந்து சென்றவர்களை ஆயுதபாணிகளாக்கி, அவர்கள் மூலம் தமிழ் மக்கள் மீது அழிவுநடவடிக்கை களை மேற்கொண்டு வந்ததை ஜனாதிபதி சந்திரிகா எவ்வாறு மறைக்க முடியும்?

ராசிக் குழு, வரதன் குழு, புளொட் மோகன் குழு என்ற பெயரில் வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளில் இயங்கிய ஆயுதக் குழுக்களின் அட்டகாசங்களுக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்? இவர்களால் பிடிக்கப்பட்டு காணாமற் போனவர்கள், சித்திரவதை செய்யப் பட்டவர்கள் எத்தனை பேர்?

இதையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா அறிந்துவைத் திருந்தாரோ, இல்லையோ இத்தகைய ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட ஆயிரம் ஆயிரம் மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

தமது படையினருடன் எந்தவொரு ஆயுதக் குழுவும் இணைந்து செயற்படவில்லை என்று தெரிவிக்கும் ஜனா திபதி சந்திரிகா - முன்னர் பல்வேறு சம்பவங்களில் கொல்லப்பட்ட ராசிக் மற்றும் அவருடன் இணைந்து செயற்பட்டவர்கள் பலருக்கும், புளொட் மோகன் மற்றும் அவருடன் இணைந்து செயற்பட்டு கொல்லப்பட்ட நிதி போன்றவர்களுக்கும் இராணுவத்தர நிலைகளை வழங் கியதை அறியாமல் இருந்தாரோ தெரியவில்லை.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற பதவியையும், முப்படைகளினது பிரதம தளபதி என்ற பதவியையும் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு - இராணு வத்துடன், குடிமக்கள் தொண்டர்படை, என்ற பெயரில் ஆயுதக் குழுக்கள் இயங்கி வந்தது தெரியாமல் இருந்தது என்றால் - அது அவரது நிர்வாக செயற்திறனற்ற தன் மையையே காட்டும்.

அதேவேளை அவர் - ஆயுதக் குழுக்கள் படையின ருடன் இணைந்து செயற்படுவதை "முழுப் பூசினிக்காயை சோற்றுக்குள் மறைப்பது" போன்று மறைக்க முனைந்தால் அதுவும் முடியாததே.

இப்போது கருணாவின் சகாக்களை ஆயுதபாணி களாக்கி - அவர்களைப் பயன்படுத்தி படுகொலைகளை நடத்துவதை ஜனாதிபதி சந்திரிகா அறியாதிருக்கிறார் என்பதை யாரும் நம்பமாட்டார்கள். அதேவேளை அப்படி எதுவுமில்லை என்று சாதிக்க முனைந்தால், அதுவும் அவர் தன்னைத்தானே ஏமாளியாக்கும் முயற்சிதான்.


கருணாவும் அவரின் சகாக்களும் - இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நட மாடுவது - படுகொலைகளில் ஈடுபடுவது சாத்தியமான தல்லவே.

படையினருடன் ஆயுதக் குழுக்கள் இயங்கிவந்த ஒரு காரணத்துக்காகவே - போர் நிறுத்த உடன்பாட்டில் 1.8 என்ற சரத்து சேர்க்கப்பட்டது. அப்படி ஆயுதக் குழுக்களை படையினர் வைத்திருக்காதுவிட்டால் - அரசாங்கம் ஏன் இப்படி ஒரு சரத்து இடம்பெறுவதை அனுமதித்தது என்ற கேள்விக்கு ஜனாதிபதி சந்திரிகாவால் விளக்கமளிக்க முடியுமா?

ஆயுதக் குழுக்களின் மூலம் புலிகளையும், தமிழ் மக் களையும் குழப்பி அதன்மூலம் அரசியல், இராணுவ அனு கூலங்களை அடைந்துவிடலாம் என்று எதிர்பார்க்கும் அரசு - தம்மிடம் ஆயுதக் குழுக்கள் இருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ளும்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக் கொண்டாரோ இல்லையோ, இத்தகைய ஆயுதக் குழுக்களின் செயற் பாடுகள் சமாதானத்துக்கு நிச்சயம் சாவுமணி அடிக்கும் என்ற நிலைமட்டும் யதார்த்த பூர்வமானது.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# டிலான் பெரேராவின் குரல் சங்கடத்தைத் தீர்க்குமா? ஆழ்த்துமா?

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் நோர்வே அரசின் அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு மூன்று ஆண்டுகள் நிறைவெய்தியிருக்கிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக இருதரப்பும் ஒருவர்மீது ஒருவர் பல தடவைகள் குற்றம் சுமத்தியிருக்கின்றன. ஆனாலும், மீண்டும் ஒரு போர் வெடிக்காமல் இன்றுவரை இருதரப்பும் கவன மாகவே இருந்துவருகின்றன.

இதேசமயம் மின்னாமல் முழங்காமல் ஒருசில நிமிடங் களுக்குள்ளே சுமார் நாற்பதாயிரம் மக்களைப் பலி எடுத்து லட்சக்கணக்கான மக்களை அனாதைகளாக்கிய சுனாமி ஏற் பட்டு இரண்டு மாதங்கள் முடிந்திருக்கின்றன.

போர் நிறுத்தம் நீடித்தாலும் நிரந்தர சமாதானத்துக்கான எந்த உருப்படியான முயற்சியிலும் ஆட்சி அதிகாரத்திலிருப் பவர்கள் முனைப்புக்காட்டுவதாகத் தெரியவில்லை. சமாதான முயற்சிகள் நடைபெறாமல் தடுப்பதிலும், தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் முயற்சி களை முறியடிப்பதிலும் சிங்கள பௌத்த மேலாண்மை வாதி கள் மிகக் குறியாக இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாதிக்க நிர்வாக சபை அமைக்கக் கோரி சமர்ப்பித்த யோசனைகள் முழுவதையும் ஏற்றுக்கொள்ளமுடியாதென்றாலும் - அவற்றின் அடிப்படையில் இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்தலாம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ரணில் விக்கிரம சிங்கவின் அரசு இப்படித் தெரிவித்தது.

இப்படிச் சொன்னதன் காரணத்தினால்தான் சந்திரிகா அம் மையார் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்த ரணிலின் ஆட்சியைக் கலைத்தார். என்றாலும், புலிகளுடன் பேச்சு நடத் தத்தயார் என்று அறிவித்தார். பேச்சு முயற்சிக்கு புலிகள் ஒத்துழைப்புத் தரவில்லை என்றார். இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை நாட்டைத் துண்டாடிவிடும் என்றார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி கதிர்காமரும் பேசினார். அம்மையாரும் டெல்கி போனார். ஒப்பந்தம் கைச் சாத்தாகவில்லை. பாகிஸ்தானுக்கு கதிர்காமருடன் போன அம்மையார் அங்கு வேறொரு ஒப்பந்தம் செய்தார். ஈரானுக்குப் போய் ஆயுத உதவி பற்றியும் பேசினார். இதற்கிடையில் சுனாமி நாட்டில் பேரிழப்பை ஏற்படுத்தியது. உலக நாடுகள் உதவிக்கு ஓடிவந்தன. அள்ளி அள்ளிக் கொடுத்தன. கையறு நிலையிருந்த சந்திரிகா அரசு நிமிர்ந்தது. இலங்கை திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பித்தர வேண்டியதில்லை என்று இத்தாலி போன்ற நாடுகள் சொல்லிவிட்டன. மற்றும் சில நாடுகள் திருப்பித்தரவேண்டிய கடனுக்குரிய கால எல்லையை நீடித் திருக்கின்றன. பசித்திருந்தவன் இப்பொழுது ஜீரணிக்க அதாவது செமியாக் குணத்துடனிருக்கிறான்.

இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சு நடத்தக்கூடாது என்று சந்திரிகா அரசில் பங்காளிக் கட்சியாக இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. எச்சரிக் கிறது. எங்களுடன் ஒத்துழைக்க முடியாதவர்கள் வெளியேற லாம் என்று மறைமுகமாக அம்மையார் சொன்னதுகூட ஜே.வி. பிக்கு உறைக்கவில்லை.

இடைக்காலநிர்வாகசபை அடிப்படையில்புலிகளுடன்பேசத் தொடங்கினால் நாங்கள் உடன் வெளியேறிவிடுவோம் என்றும் ஜே.வி.பி. எச்சரித்தது. மறுகணமே நாங்கள் ஏன் வெளியேற வேண்டும்? நாங்கள் வெளியேறமாட்டோம் என்று அறிவித்து விட்டார்கள். இதற்காக சிவப்புத் தொப்பிகளுடன் ஒரு பெரிய ஆர்ப்பாட்டக் கூட்டத்தையும் நடத்திக் காண்பித்தார்கள்.

இருபதாண்டு காலப் போரினால் புலம்பெயர்ந்து உடமை கள், வீடுவாசல்கள், தொழில்களை இழந்து நிற்கும் மக்களுக்கு - புனர்வாழ்வும் புனரமைப்பும் அவசரமாக அளிக்கப்பட வேண்டு மென்பதற்காகவே இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கேட்டனர். இப்பொழுது சுனாமியாலும் தமிழர் தாயகத்தில் சகலவற்றையும் இழந்து நிற்கும் மக்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கு இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை மிக அவசியமாகும்.

சுனாமி அழிவுக்குப் பின்னராவது ஆட்சியிலுள்ளோர் நியாய மாக நடந்துகொள்வார்களென மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஆட்சியிலுள்ளவர்களும், சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும், பேரினவாத ஊடகங்களும் - விடுதலைப் புலி களையும் அதன்மூலம் தமிழ் இனத்தையும் அழித்தொழிப் பதையே முக்கியநோக்கமாகக் கொண்டிருக்கின்றன. பயங் கரவாத இயக்கங்கள் எல்லாவற்றுடனும் முன்பு தொடர்புபடுத் திய கதிர்காமர் சுப்பிரமணிய சுவாமிகள், இப்பொழுது அதைச் சொல்லமுடியாததால் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதாகத் தூக்கிப்பிடித்துக் கூச்சலிடுகிறார்கள்.

தமிழர் தாயகத்தில் சுனாமியால் அழிந்த வீடுகளுக்குப் பதிலாக இல்லங்கள் அமைக்கவோ, அகதிகளால் நிறைந் துள்ள கல்வி நிலையங்களிலிருந்து பிள்ளைகளுக்கு கல்வி நிலையங்கள் அமைக்கவோ அரசு முன்வரவில்லை.

இதற்கெல்லாம் அம்மையாருக்கு சிந்திக்க நேரமேது. ஜே.வி.பியை என்ன செய்வது? எப்படிச் சமாளிப்பது? மலையக முன்னணியை முறியடிக்க - இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் அரசிலிருந்து வெளியேற மிரட்டுகிறது. புலிகளுடன் ஒத் துழைக்க வெளிநாடுகள் வற்புறுத்துகிறார்கள். அம்மையாரின் சங்கடத்தைத் தீர்க்க பிரதி அமைச்சர்கள் குழுத் தலைவர் டிலான் பெரேரா துணிந்து சில கருத்துக்களை கூறியுள்ளார். இது சங்கடத்திலிருந்து அம்மையாரை மீட்குமா? அல்லது மீண்டும் அவரை சங்கடத்துக்குள் ஆழ்த்துமா? டிலான் பெரேராவின் வெளிப்படையான பேச்சை ஜனாதிபதி எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார். இதற்கு காலம்தான் விரைவில் பதில் சொல்லவேண்டும்.

# வாசகர் நோக்கு

## பயிலுனர் பட்டதாரிகளின் பரிதாப நிலை!

அரசாங்கத்தினால் நாடுமுழுவதும் உள்ள 42 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வேலை வழங்கும் நோக்குடன் அமைச்சுக்கள் - அரச திணைக் களங்கள், உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு உட்பட்ட சபை கள், மாநகரசபைகள், கூட்டுத்தாபனங்கள் போன்ற பல்வேறு அரசதுறைசார்ந்த நிறுவனங்களில் வேலை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், பட்டதாரிகளுக்கு 3 மாத முன் பயிற் சிகள் வழங்கப்பட்டு. மேலும் 9 மாதகால பயிற்சிகளை பெறு வதற்காக இந்த அரச துறைகளில் 6 ஆயிரம் ரூபா கொடுப் பனவுடன் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி களில் இயங்கும் அரசதிணைக்களங்களில் போதிய கட்டட இருப்பிட வசதிகள், தளபாட மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கணிசமான தொகையினர் உள்வாங்கப் பட்டிருப்பதால் இவர்கள் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

மேலும், ஆசிரியர்களுக்கான பயிற்சியை பெறுவதற்காக கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் நிலை பரிதாபமாக உள்ளது. சில திணைக் களங்களில் தலைவர்களின் தற்துணிவான, திறமையான திட்டங்களின் ஊடாக நல்ல பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் வழங்கப்படுகின்றன. ஆனால், சில திணைக்களங்களில் பயிற்சிபெறும் பட்டதாரிகள் வேலையின்றி உட்கார்ந்திருக்கும் நிலை காணப்படுகின்றது. இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்குவதற்கான அறிவுறுத்தலோ அன்றி திட்டநிகழ்ச்சிகளோ திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அத்துடன், சில திணைக்களங்களில் தமக்கு வேண்டிய வர்கள் உறவினருக்கு சில வேலைகள் சம்பந்தமாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தநிலையில் திறமையும் இளமைத் துடிப்பும் உள்ள கணிசமான பட்டதாரிகள் அரச துறையின் நிர்வாகம் இவ்வாறானதுதானா? என தமக்குள்ளேயும் மற்றவர்களுடனும் மனம் நொந்திருப்பதுடன் எதிர்காலத்தில் மேலும் வினைத்திறன் அற்ற அரச நிர்வாகத்திற்கே இத்தகைய அசமந்தப் போக்குகள் வழிவகுக்கும் என அங்கலாய்க்கின்றனர்.

*யாழ்ப்பாணம்* *அன்றா*

பகுதி 48 — சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...



மட்டக்களப்பிலிருந்து திருக்கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த போராளிகளை 13.02.2005 அன்று இரவு 8.30 மணியளவில் அக்கரைப்பற்றில் தடுத்து நிறுத்திய விசேட அதிரடிப்படையினர் – அவர்களை உடற்பரிசோதனைக்கு உட்படுத்தினர். ஆண் போராளிகள் 6 பேரையும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்திய அவர்கள், அவர்களுடன் சென்ற 10 பெண் போராளிகளையும் சோதனையிட முனைந்தனர். அந்தச் சமயம் பெண் போராளிகளைப் பெண் பொலிஸாரே சோதனையிடவேண்டும் என, புலிகள் வலியுறுத்தவே – படையினருக்கும், புலிகளுக்குமிடையில் கடும் வாக்குவாதம் நிகழ்ந்தது. பின்னர் காரைதீவிலிருந்து வரவழைக்கப்பட்ட பெண் விசேட அதிரடிப் படையினரால், பெண் போராளிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் சுமார் இரண்டரை மணித்தியாலம் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

மேலும் சில செய்திகள் –

பூகம்பத்தால் கடலின் அடியிலிருந்து வெடித்துச் சிதறிய நான்கு அடி உயரமான பாரிய கருங்கல்லொன்று, சுனாமியால் தம்பட்டைக் கடற்கரையில் ஒதுங்கியுள்ளது. இதனைக் கனேடிய ''அம்டா'' நிறுவனப் பணிப்பளார் கலாநிதி வில்லியம் குருட் கல்முனைக்குக் கொண்டுசென்றுள்ளார். பல உண்மைகளின் சாட்சியாக விளங்கக்கூடிய இந்தக் கல், கல்முனை சுவாமி ஞாபகார்த்த சிறுவர் சிகிச்சை நிலைய முன்றலில் நடப்பட்டுள்ளது. சுனாமி நினைவுக் கல் 2004 என்று இதற்குப் பெயர் சூட்டப்பட்டு, அதனை இந்த இடத்தில் பேணப் போவதாகக் கலாநிதி வில்லியம் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய விசேட தூதர் யசுசி ஆகாஷி – பழுகாமத்தில் உள்ள காந்தரூபன் அறிவுச் சோலைக்கு விஜயம் செய்து, சுனாமியின் பின் பெற்றோரை இழந்த குழந்தைகளையும், ஏனைய குழந்தைகளையும் பார்வையிட்டார்.

சுனாமியால் 160 முன்பள்ளிச் சிறார்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர். ஆறு முன்பள்ளி ஆசிரியைகளும் உயிரிழந்துள்ளனர். இவர்களின் 45 ஆம் நாள் நிகழ்வு சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள சுவிஸ் கிராமத்தில் இடம்பெற்றது.

ஒந்தாச்சி மடத்திலுள்ள குருக்கள் ஒருவரின் மனைவி உயிரிழந்துள்ளார். இந்தக் குருக்களின் ஆறு வயது மகள் மலசல கூடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தார். சம்பவதினம் முதல் இவர் அழுதபடி இருந்துள்ளார்.

தேடுதலில் ஈடுபட்டோர் இவரது குரலைக் கேட்டு, ஆடு கத்துகிறது என நினைத்து அந்தப் பக்கம் செல்லவில்லை. அடுத்தநாள் தான் இது ஆட்டின் குரல்போல இல்லையே என நினைத்து, இடிபாடுகளை அகற்றிப் பார்த்தபோது, சிறுமியைக் கண்டு மீட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி குருக்கள் மடத்தில் ஒரு பெண்ணின் சடலம் கரையொதுங்கியுள்ளது. பெரும்பாலும் எலும்புக்கூடாகவே மீட்கப்பட்ட இந்தச் சடலத்தில் இருந்த ஆடைகள் மற்றும் முடி என்பவற்றைக் கொண்டு இது பெரும்பாலும் இந்தோனேஷியப் பெண்ணாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

பாண்டிருப்பு ஸ்ரீ மகா விஸ்ணு ஆலயப் பூசகரின் மனைவி கா.கலாவும், பிள்ளைகள் – சத்தியப்பிரியா, உமாநந்தினி, ஹர்சன் ஆகியோரும் இந்த அனர்த்தத்தில் பலியாகியுள்ளனர்.

திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில் பிரதம குரு, நீதிநாதக் குருக்களின் நான்கு வயதுப் பேரனொருவர் (இராசா ஐயரின் மகன்) சுனாமியால் உயிரிழந்துள்ளார். பெற்றோருக்குத் திருமணமாகி எட்டு வருடத்தின் பின் பிறந்த இந்தப் பையன், அயல்வீட்டிலுள்ள விநாயகபுரம் மகாவித்தியாலய ஆசிரியை இந்திராகாந்தியின் இரு பெண் பிள்ளைகளுடன் நின்றிருந்தார். அந்தச் சமயம் ஆலயத்தின் மயில் அந்த இரு பெண் பிள்ளைகளையும் விடாமல் கொத்தித் துரத்தியுள்ளது. எனவே ஆசிரியை மயிலிடம் இருந்து காப்பாற்றத் தனது பிள்ளைகளை அப்பால் கொண்டு சென்ற சமயமே சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது. மயிலின் செய்கையால், அந்தப் பிள்ளைகள் இருவரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அலையைக் கண்டு சிறுவனின் தாய் ஓடிப்போய்த் தூக்கிச் செல்லுகையில், அலையுடன் வந்த படகு ஒன்று இவர் மீது மோதவே சிறுவனைக் கைவிட நேர்ந்தது. குருக்கள் அலரிமரமொன்றில் ஏறித் தப்பியுள்ளார். அவரது துணைவியார் மரணமாகியுள்ளார்.

இதேவேளை – திருக்கோயிலில் அலை வந்து சென்ற பின், முன்னர் இந்தக் கோயிலுக்கு இடப்பட்ட இராஜகோபுரத்தின் அடித்தளம் தெரிவதாக சமூக சேவையாளர் ஆனந்தப் போடியார் தெரிவித்தார். ஆலயத்தின் அருங்காட்சியகத்தில் இருந்த இரு யானைத் தந்தங்களும் மூலஸ்தானத்துக்கு அண்மையாக நீரால் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மயிலால் இந்தச் சிறுமிகள் காப்பாற்றப்பட்டதுபோல, கல்முனையில் மாட்டினால் ஒரு பெண்மணி காப்பாற்றப்பட்டுள்ளார். இவர் அலையால் அள்ளுண்டு, ஒரு கிணற்றுக்குள் வீழ்த்தப்பட்டுள்ளார். அந்தச் சமயம் கிணற்றுக்குள் கயிறு போல ஒன்று தொங்கிக்கொண்டிருக்கவே, அதை எட்டிப்பற்றிக்கொண்டார். அது ஒரு மாட்டின் வால், இவர் வாலைப் பற்றியதும் மாடு ஓடத் தொடங்கியது. அதனால் இவர் கிணற்றிலிருந்து இழுத்து வெளியே வர முடிந்தது.

மட்டு.குருக்கள் மடத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கென சமையல் உபகரணங்களுக்காக வழங்கப்பெற்ற ரூபா 2 ஆயிரத்து ஐந்நூறும்,375 ரூபா பெறுமதியான முத்திரையும், 15 பேரிடம் மீளப்பெறப்பட்டது. 31.01.2005 இல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பகலில் வழங்கப்பெற்றவை இரவு 12 மணியளவில் வீட்டுக்கதவு தட்டப்பட்டு திரும்பப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொத்துவிலில் பால் சேகரிப்பு நிலையம் முற்றாக அழிந்துள்ளது. கட்டடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. தினசரி 6500 லீற்றர் பாலை வழங்கி வந்த கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ள வடக்கு – கிழக்கு மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், மட்டு. கல்லடியில் அமைந்திருந்த தமது கோழிப்பண்ணையும் நிர்மூலமாகியுள்ளதாகவும், உபகரணங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பொத்துவிலில் மீள்குடியேற்றம் என்ற பேரில், முஸ்லீம்களின் காணிகளில் சிங்களக்குடியேற்றம் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஐ.தே.க எம்.பி மயோன் முஸ்தபா ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர். அத்துடன் உல்லையில் புத்தர்சிலை ஒன்று அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காத்தான்குடி மக்களுக்கு கொழும்பு மேமன் சங்கம் 15 லட்சம் பெறுமதியான கூரைத்தகடுகளை 30.01.2005 அன்று வழங்கியுள்ளது. மட்டு.முஸ்லிம் வர்த்தக சமூகத்தினர் பறங்கி இன மாணவர்களுக்கு, 05.02.2005 அன்று கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

வேதனையில் கொதித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு களிப்பூட்டல் என்ற போர்வையில் திருக்கோயில் மண்டானை காயத்திரி நலன்புரி நிலையத்தில் பண்பாட்டுச் சீர்கேடுகளை ஏற்படுத்தக்கூடிய ஆபாசப் படங்களைப் படையினர் ஒளிபரப்புச் செய்து வருகின்றனர். இந்தச் சம்வம் தொடர்பாக விநாயகபுரம் பொது நல அமைப்பு, உடும்பன்குள அரசியல் பொறுப்பாளர் நீலாகரனிடம் முறைப்பாடு செய்துள்ளது. மேலும், திருக்கோயில் நலன்புரி நிலையங்களில் ஈ.பி.டி.பியினரால் தென்றல் ஒலிபரப்புச்சேவை மூலமாக ஒலிபரப்பப்படும் இதய வீணை நிகழ்ச்சியைப் பதிவுசெய்து ஒலிபரப்பிவருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நியூ.ஈஸ்ரேன் பஸ் கம்பனியின் கல்முனைச்சாலைப் பணியாளர்களுக்கு விடுதலைப் புலிகள் உலர் உணவு நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர். 31.01.2005 அன்று நடைபெற்ற இந்த நிகழ்வில்– அம்பாறை மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் புவிராஜ், கல்முனை பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் தேவா, மட்டு – அம்பாறை மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சசிமதி மற்றும் நியூ ஈஸ்ரேன் பஸ் கம்பனியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

மருதமுனையில் அமைந்திருந்த இலங்கைப் பரம்பரை வைத்திய சங்கக் கணினிக்கூடம் அழிந்துள்ளது.

(தொடரும்...)

---

இறையியல் — மோ. தார்சீசியஸ்

# தாகம் தீர்ப்போம் – நிலைவாழ்வு பெறுவோம்



**தவக்காலம் 3 ஆம் ஞாயிறு –**

**நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது (யோவா 4:14)**

தண்ணீர் – தாகம் மனித வாழ்வில் இடம் பெற்ற மறுக்க முடியாத மறக்க முடியாத சொற்கள். இவை மானிட வாழ்வில் இரண்டறக்கலந்தவை. தாகம் எடுக்காத ஜீவன்கள் இல்லை. மனிதன் தாகம் எடுத்ததும், தண்ணீரைத் தேடி ஓடுகிறான். தாக சாந்தி நிலையங்களை நாடுகிறான். தான் விரும்பும் பாணங்களைப் பருகி, தாகம் தீர்க்கிறான். இதுபோல மிருகங்களும் தாகம் எடுக்கும் போது, நீர் நிலைகளை நாடி ஓடுகின்றன.

வேறு சிலர் மக்களின் நலன் கருதி, பொது இடங்களில் கிணறுகள் தோண்டி, மக்களின் தாகம் தீர்க்க உதவியுள்ளார்கள். இந்த வகையில் அந்தக் காலத்தில் யாக்கோபுவும் கிணற்றைக்கட்டி, தம்மக்களுக்கு உதவினர். இதனால் இக்கிணறு யாக்கோபுவின் கிணறு என அழைக்கப்பட்டது. இந்தக் கிணறுதான் யேசுவும் சமாரியப் பெண்ணும் சந்திக்கும் இடமாக அமைந்தது.

யேசுவின் சில செயல்கள் கருத்தாழம் நிறைந்ததாகவும், பொருள் நிறைந்ததாகவும் அமைந்துள்ளன. அவருடைய அருஞ் செயல்கள், புதுமைகள்கூட இந்தத் தன்மையானவையே. இந்த நிகழ்வுகளுக்குப் பின்னால் பல உண்மைத் தன்மைகளையும், தத்துவங்களையும் நாம் காணலாம்.

யேசு மனித சுபாவத்தில், மனிதனோடு மனிதனாக வாழ்ந்துவந்தார். இதனால் நற்செய்திப் பணியை கால்நடையாக, ஊர்ஊராக மேற்கொண்டு வந்தார். எனவே அவருக்குத் தாகம் எடுத்தது. இயற்கையே. ஆனால் இவரது இந்த இயற்கைத்தாகத்தின் பின்னால், இரட்சணிய தாகமும் கலந்திருந்தது. இது சமாரியப்பெண்ணுக்கு முதலில் விளங்கவில்லை. 'குடிக்கத் தண்ணீர் கொடும்' என்று கேட்ட போது, சமாரியப்பெண் முதலில் தனது சமூகநிலையை நோக்கினாள். நீர் யூதர், நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி? என்றாள். சமாரியர் என்றால் அன்றைய சமூகக் கட்டுப்பாட்டில் ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட சாதி. தீண்டத் தகாதவர்கள் அப்படி இருக்க, அவரை யூதர் என்று கணித்த இந்தப் பெண் அத்தகைய கேள்வியை முன் வைத்தாள். இரண்டாவதாக தண்ணீர் கொள்வதற்கு எத்தனை ஏதனங்களும் இன்றி இவர் எப்படிக் கேட்கலாம் என்பது அவளது விவாதம். ஆனால் இயேசு மேல்சாதியினரையோ, மேல் மட்டத்தினரையோ, உயர்குடியினரையோ தேடி வரவில்லை. பாவிகளை மீட்கவே வந்தார். நோயாளிகளுக்குத் தான் வைத்தியர் தேவை என்பதை உணர்ந்து, இங்கே அதனை உணர்த்தினார். ஆனால் சமாரியப் பெண்ணோ அதனை எளிதில் புரிந்து கொள்ளவில்லை. மேலும் அவர், ''உம் கணவரைக் கூட்டிவாரும்'' என்றபோது அவளது மனதிலே போராட்டம் வெடித்தது. உண்மை வெளிவந்தது. அவரை ஒரு இறைவாக்கினர் என்று முதலில் உணர்ந்தாள். பின்னர் அவளும், அவளது சமூகத்தினரும் அவரை உலகின் மீட்பர் என ஏற்றுக்கொண்டனர்.

''அம்மா, என்னை நம்பும் காலம் வருகிறது'' என்றார். அந்தக் காலம் அந்த இடத்திலேயே அரும்பத் தொடங்கியது. அவரது வார்த்தைகள் எப்போதும், எவ்விடத்திலும் உயிருள்ளது, வாழ்வுள்ளது, வாழ்விக்கவல்லது. அன்று ஒரு சொல்லாலே உலகைப் படைத்தவர், இன்று இங்கேயும் ஒரு சொல்லால் பாவியை மனந்திரும்பப் பண்ணிவிட்டார்.

தனது பாவவாழ்க்கையை உணரவைத்துவிட்டார்.

புது வாழ்வுக்கு வழிசமைத்து விட்டார்.

அவரின் போதனைகள், கிறீஸ்தவ வாழ்வின் காரம். பல்லாண்டு காலம் வழக்கத்திலிருந்த யூத சட்ட விளக்கங்கள், பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள் இவையனைத்துக்கும் முற்றிலும் மாறுபட்டதும், ஆனால் தூய வாழ்வுக்கு முற்றிலும் ஏற்றதொரு போதனையை, சாதனையை வழங்குகின்றார்.

உலகின் போக்குக்கு மாறாக இறைவனைச் சார்ந்துவாழும் எளிய மனமே பேறு பெற்றது.

ஒழியும்வரை பழிவாங்குதல் உலக நோக்கு ஆயினும், கனிவுடைய நெஞ்சமே பேறு பெற்றது என்றார்.

நீ சிரித்தால் உலகமும் உன்னோடு சேர்ந்து சிரிக்கும் என்பது மண்ணின் போதனை.

ஆனால் துயருறுவோரே பேறு பெற்றோர். இருக்கும்வரை அனுபவித்துவிடு. இது சிற்றின்பம் விடுக்கும் அழைப்பு.

இறையரசுக்குரிய மதிப்பீடுகளை யேசுகூறுவது இன்றைய உலக இயல்புக்கும், மதிப்பீடுகளுக்கும் முரண்பாடானவை.

ஆனால் யேசு மனித மீட்பையும், இரட்சணியத்தையுமே நோக்காகக் கொண்டவர்.

இந்த நோக்கில் சமாரியப் பெண்ணின் வரவும், சம்பாஷனையும் அவரது நோக்கத்தைப் பூர்த்தி செய்தது.

அவரது வாக்கைக்கேட்டாள். தன்நிலை உணர்ந்தாள்.

தன் போக்கை மாற்றினாள். நாமும் இதய தாகம் தீர்ப்போம். நிலைவாழ்வு பெறுவோம்.

---

## தவக்கால நற்சிந்தனை

''குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்''?

(யோவா :8)



தண்ணீர் எமது வாழ்வில் முக்கிய இடம் வகிக்கிறது. தண்ணீர் இன்றிச் சீவிப்பதே மிகக் கடினம். இஸ்ராயில் மக்கள் செங்கடலைக் கடந்து சென்றபோது, தண்ணீரின்றிக் கஷ்டப்பட்டபோது, கடவுள் கற்பாறையிலிருந்து தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தார். குடித்தார்கள். தாகம் தீர்ந்தது. ஆனால், இங்கோ மனுமகனுக்கோ, உடல் தாகமல்ல ஆன்மதாகம் தான் ஏற்பட்டது. யாக்கேப்பின் கிணறு. சமாரியப் பெண். யேசு. இதன் மூலம் யேசு சமாரியப் பெண்ணும், அதுவும் யூதரால் ஒடுக்கப்பட்டவள், பாவ வாழ்க்கையில் மூழ்கியவள், அவனும் மனந்திரும்ப வேண்டும், அவளும் நிறைவாழ்வை, திருந்திய வாழ்வைப் பெறவேண்டும் என்று விரும்பினார். அவளும் புரிந்துகொண்டாள். அவரை ஏற்றுக்கொண்டாள். இதனால் சமாரிய சமூகமே விழித்துக்கொண்டது. எமக்கு எப்போது இந்த விழிப்புணர்வு வரும்?

மோ. தார்சீசியஸ்

# இஸ்ரேலில் இரவு விடுதிக்கு வெளியே தற்கொலைத் தாக்குதல்; ஐவர் பலி!



இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் நகரிலுள்ள இரவு விடுதிக்கு வெளியே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் - தற்கொலைப் படையாளி உட்பட ஐவர் பலியானதுடன், ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன தலைவர்களுக்கிடையே கடந்த எட்டாம் திகதி எகிப்தில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏற்பட்டுவரும் சமாதான நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை பலஸ்தீன தலைவர் அப்பாஸ் வன்மையாக கண்டித்துள்ளதுடன், இது தொடர்பாக தாம் மௌனமாக இருக்கமாட்டாரெனவும் இந்தத் தாக்குதலை நடத்தியவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படுமெனவும் பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் தெரிவித்ததாக ஏ.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாக்குதலை நடத்தியவர்களுக்கெதிராக பலஸ்தீன அதிகாரசபை தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் பயங்கரவாதிகளிடமுள்ள சட்டவிரோத ஆயுதங்களைக் களைந்து அவர்களையும் கைது செய்யவேண்டுமென பிரதமர் ஷரோனின் ஆலோசகர்களில் ஒருவரான ரானான் இஸ்ஸின் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கான பின்னணி குறித்து ஆராய்வதுடன் தாக்குதலை நடத்தியவர்களுக்கெதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோ லீசா ரைஸ் பலஸ்தீன அதிகாரி களிடம் கோரியுள்ளார்.



இதேவேளை, இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய வர்கள் எனத் தெரிவித்து ஐந்து சந்தேக நபர்களை இஸ்ரேல் படையினர் கைது செய்துள்ளனர். இவர்களில் இருவர் தற்கொலைக் குண்டுதாரியின் சகோதரர்களாவர்.

தாக்குதலை நடத்திய தற்கொலை யாளி அல் – அக்சா மார்ட்டியர் பிரிகேட்டைச் சேர்ந்த உறுப்பினர் எனவும், இந்த அமைப்புக்கு லெபனானைத் தளமாகக் கொண்டியங்கும் ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு வழங்குவதாகவும் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தமையை ஹிஸ்புல்லா அமைப்பு மறுத்துள்ளது. அத்துடன், இந்தத் தாக்குதலைத் தாம் நடத்தவில்லையென பலஸ்தீனத்திலுள்ள பிரதான அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலை பலஸ்தீனத்திலுள்ள அமைப்புக்கள் நடத்தியதற்கான சாத்தியங்கள் இல்லையெனவும் பலஸ்தீனத்திற்கு வெளியிலுள்ள அமைப்பொன்றே நடத்தியதற்கான சாத்தியங்கள் உள்ளதாக கருதப்படுவதாகவும் ஜெருசலேமிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் ஜேம்ஸ் றெனோல்ட் தெரிவித்தார்.

## உலக நோக்கு

# நாயைக் கடித்துக் குதறியவர் சிறையில் அடைக்கப்பட்டார்!

(லண்டன்)

ஸ்கொட்லாந்தில் நாயைக் கடித்துக் குதறி, உதைத்தவர் கைது செய்யப்பட்டு விலங்குகள் வதைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஸ்கொட்லாந்து தலைநகர் எடின்பார்க்கில் மக்கள் கூட்டம் நிறைந்த சந்தைப் பகுதியில் 8 வயது நாயுடன் டேவிட் டாட் (வயது 34) என்பவர் வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பார்வை இல்லை. துணைக்கு நாய்தான் வந்தது.

என்ன நடந்தது ஏது நடந்தது என்பது தெரியாது. திடீரென நாயைக் கடித்துக் குதறினார். அது வலிதாங்க முடியாமல் குரைத்தது. திருப்பிக் கடிக்கவில்லை என்பதுதான் அதன் விசுவாசம்.

அத்துடன் நிற்காமல் நாயை எட்டி உதைத்தார். வீதியின் மறு பக்கம் நாய் போய் விழுந்தது. இதைப் பார்த்த மக்கள் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் கொடுத்தனர். டேவிட் கைது செய்யப்பட்டார். விலங்குகள் வதை தடுப்புச் சட்டம், அமைதியை சீர்குலைத்தல் போன்ற சட்டப் பிரிவுகளின் கீழ் டேவிட் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# தலிபான்களின் தாக்குதலில் 9 ஆப்கான் படையினர் பலி!

(ஆப்கான்)

ஆப்கானின் தென்பகுதி மாகாணமான ஹெல்மான்டில் தலிபான் கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒன்பது ஆப்கான் படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பாகிஸ்தானின் எல்லையோரமாக உள்ள ஆப்கானின் நிலப்பரப்பில் இடம் பெற்றது.



நாம் கடந்த வியாழக்கிழமை இந்தப் படையினருடனான தொடர்பை இழந்திருந்தோம். மறுநாள் இவர்களது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஹெல்மான்ட் மாகாண ஆளுநரின் பேச்சாளரான ஹாஜி வாலி மொகமட் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட 9 பேரில் இருவர் அதிகாரிகளெனவும் மற்றைய அனைவரும் சிப்பாய்களெனவும் இவர்கள் காரில் பயணம்செய்த வேளை, அவர்கள் கொண்டு சென்ற ஆயுதங்களும் காணாமற்போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக தலிபானின் பேச்சாளர் முல்லா ஹக்கீமி தெரிவித்தார். அத்துடன் ஆப்கான் மற்றும் கூட்டணிப் படைகளுக்கெதிராக மேலும் தாக்குதல்கள் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை ஆப்கானின் கோஸ்ற் பகுதியில் ஆப்கான் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் கூட்டணிப்படைகளும், ஆப்கான் படைகளும் இணைந்து நடத்திய தாக்குதலில் மூன்று கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாகவும், இந்த இடத்திற்கு ஹெலிகொப்ரர்கள் அனுப்பப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் 7 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

மூன்றாவது சம்பவம் கந்தகாரில் இடம்பெற்றது. இங்கு வீதியோரமாக நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.


இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

ஸ்ரீ கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486

இல.91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல.80,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

C/3852



# பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆளுகைக்கு உட்பட்ட நிறுவனங்களில் பின்வரும் பணிநிலைகளுக்குத் தகுதி உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிநிலைகள்

1. கணக்காய்வாளர்
2. கணக்காளர்
3. கணக்குப் பதிவாளர்

அகவை 18 தொடக்கம் 40 வயதிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)


*கல்வித் தகைமை*

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தி அடைந்திருக்கவேண்டும். மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் 10.03.2005ஆம் திகதிக்கு முன்பாக தங்களது விண்ணப்பங்களை ஆளணி நிர்வாகப் பகுதி, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நடுவப்பணியகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**ஆளணி நிர்வாகப் பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
**நடுவப்பணியகம், கிளிநொச்சி.**

(C/3631)


# கண்ணீர் அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்

## வே.க.ஏரம்பு

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைகிறோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதுடன்,

27.02.2005 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி இந்து மயானத்தில் நடைபெறும் அன் னாரது இறுதிச் சடங்கிலும் அனைத்து தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்!

-செயலாளர்

**தேசிய எழுச்சிப் பேரவை, யாழ். மாவட்டம்.**

(1075)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாட்டுப் பற்றாளர் ஏரம்புவின் இறுதிநிகழ்வுகள் இன்று!

நாட்டுப் பற்றாளர் வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்புவின் இறுதி வணக்க நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை கிளிநொச்சியில் உள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் இறுதி வணக்க நிகழ்வு நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு திருநகர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

### தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு

# ஜப்பானிய அரசாங்கம் 89 லட்சம் ரூபா நிதியுதவி!

(கொழும்பு)

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கான நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைக்கும் திட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கம் 8.9 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள் ளது.

அவசர சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் அடிப் படையிலேயே, ஜப்பான் இந்த நிதியுதவியை வழங்கவுள்ளது.

இந்த நிதி வழங்கலுக்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் கைச்சாத்தானது. இதில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அக்கியோ சூடாவும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எக்கநாயக்காவும் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சின் செயலாளர் மாலி காஸ்பே மற்றும் மீள் கட்டுமான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜப்பானின் நிதியுதவியுடன் இந்தத்திட்டத்தைவடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்த வுள்ளது.

தற்போது அவசர உதவித்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை வைத்தியசாலை இலங்கை அர சாங்கத்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதற்குள் புற்றுநோய் நோயாளிகளுக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. இந்த புனரமைப்புத் திட்டத்தில் வைத்தியசாலைக்கான நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இவற்றினை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு ஜப்பானிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே ஜப்பான் இந்த நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது.

## இடைக்கால அபிவிருத்தி...

இந்த சபையின் மூலம் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியை செலவு செய்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் கட்டமைப்புச் செய்வதற்கான நிதியைக் கையாளும் பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என புலிகள் வலியுறுத்தி வந்தமை தெரிந்ததே.

இதேவேளை -

வடக்கு - கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற் கென அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், உலக வங்கி ஆகியன தயாரித்த திட்ட யோசனைகளின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தையும், பங்குச் சந்தையையும் அபிவிருத்தி செய்வது குறித்து கொழும்பில் நடைபெற்ற மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்வது குறித்து அரசாங்கமும் உலக வங்கியும் தயாரித்த மதிப்பீடுகள் அநேகமாக ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

வடக்கு - கிழக்கில் புனர்நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. இந்த அறிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. புனரமைப்புப் பணிகள் தொடர்பாக மிகச் சிறந்த அடிப்படை ஒன்று எம்மிடம் உள்ளதாக அவர் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தே)

## தொண்டமானுக்கு...

கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகிறது.

நுவரெலியா பொலிஸாரின் நடத்தைகளால் ஏற்பட்ட வெறுப்புக்கள் மற்றும் அரசிடமிருந்து தமது எதிர்பார்ப்புக்கள் எதுவுமே நிறைவேற்றப் படவில்லையெனவும் தெரிவித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக கடந்த வியாழக் கிழமை தீர்மானித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (தே)

## பேச்சுக்களை...

டிருக்கவில்லை.

இந்தியா வழங்கிய உதவிகளை இலங்கை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கும். இநத உதவிக்கு நிரந்தரமான எமது நன்றியை பரம்பரை பரம்பரையாக தெரிவிப் போம்.

இந்திய கடற்படை மிகவும் தீவிரமாக உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவர்கள் இலங்கையின் பல பிரதேசங்களில் இந்த மீட்பு பணிகளை செய்துள்ளனர். இந்தியா ஒரு சிறந்த முன்னணியான கடற்படைப் பலத்தை கொண்டுள்ள நாடாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானப் பணிகளுக்காக இந்தியா 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள் ளது. ஆனால் எமக்கு மீள் கட்டுமானத்துக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 1.8 பில்லியன் வரை தேவை யாகும்.

பல நாடுகள் எமது நாட்டின் மீள் கட்டுமானத் திட்டங்களுக்கு உதவுவதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், நிதியுதவிகளை வழங்குவதற்கும் உறுதியளித்துள்ளன. இந்த மீள்கட்டுமானப் பணியில் இந்தியா மிகப் பெரிய பங்கை வகிக்கு மென எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## பாதுகாப்பு...

தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தினார். இந்த வகையில் இரு நாடுகளும் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிலைக்கு நெருங்கி வந்துள்ளதாக புதுடெல்கியில் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பை அடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை கதிர்காமர் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

## அரசிலிருந்து...

சாங்கம் ஆறு வருடப் பதவிக் காலம் முடியும் வரை பதவியில் இருக்கும்.

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில் - புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக ஜே.வி.பி கூறுகிறது.

ஆனால், இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைபை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது என்பதை என்னால் கூறமுடியும்.

ஐ.தே.கவைச் சேர்ந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்புக்கு தாவத் திட்டமிட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போது மக்களின் எதிர்ப்பால் ஜே.விபியினர் வெளியேறினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள பெரிய கல்லாறு கிராமத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுக்கப்போவதாக கூறிக் கொண்டுவந்த ஜே.வி.பியினர் - பொது மக்களின் எதிர்ப்புக் காரணமாக அங்கிருந்து வெளியேறினர்.

நேற்றுமுன்தினம் இரவோடிரவாக, மேல்மாகாணசபை உறுப்பினர் காஞ்சன பீரிஸ் தலைமையில் 50 இற்கும் மேற்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் அங்கு சென்றிருந்தனர்.

நேற்றுக்காலை 'ஜே.வி.பியின் நிவாரணப் பணி' என்ற தலைப்பில் தனியார் காணியொன்றில் பதாகையொன்று கட்டப்பட்டு சிலர் தற்காலிகமாக இருப்பிடங்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதனை அவதானித்த கிராமத்து மக்கள் அங்கு கூடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

'உன்னுடைய வீடு எங்களுக்குத் தேவையில்லை.

'ஜே.வி.பியே வெளியேறு'.

'சிங்கள மக்களின் நிவாரண உதவிகளை ஏற்போம் ஆனால் இனவாதியான உனது உதவி எமக்கு வேண்டாம்'

எனப் பல கோசங்களை எழுப்பினார்கள். இதனையடுத்து அந்த இடத்திற்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. எனினும் பொதுமக்களின் எதிர்ப்பினால் மாலைக்குள் ஜே.வி.பியினர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

## நலன்புரி முகாம்களில்...

ளும் தொண்டர் அமைப்புக்களும் இடையூறுகளைச் சந்திக்க வேண்டியி ருக்கிறது.

அது மட்டுமன்றி சில சந்தர்ப்பங்களில் போராளிகளும் இடையூறுகளை சந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். என்பது போன்ற விடயங்களை இந்தச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகள் விரிவாக எடுத்துக் கூறினர்.

லெப்.கேணல் கௌசல்யன் படுகொலைச் சம்பவமானது - பாரிய யுத்த நிறுத்த மீறலாகும் எனவும், இராணுவ ஒத்துழைப்புடன் இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும், தெரிவித்த விடுதலைப்புலிகள் - மேலும், சமாதானம் நீடிக்க வேண்டும். அது நிலைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தமக்கு இந்தப் படு கொலையானது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்தச் சந்திப்பின் போது அவரது கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன், துணைஅரசியல் துறைப் பொறுப்பாளர் தயா மோகன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் குவேனி, மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி பிரபா, மாவடி முன்மாரிக் கோட்டத்தளபதி ரமணன் ஆகியோரும் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(07)

## இந்தியத் தூதுவர்...

நிருபமாராவ் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் மூன்று வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள் வழங்கல் கட்டடங்கள் என்பவற்றை நிர்மானித்தல் என்பவற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.


பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அம்பாந்தோட்டை வைத்தியசாலை என்பனவற்றுக்கான முழு நிதியுதவிகளையும் இந்திய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது எனவும், அதற்காகவே இந்தவைத்தியசாலைகளை பார்வையிடுமாறு இந்திய அரசு தன்னை அனுப்பி வைத்துள்ளது எனவும் தெரிவித்தார். அத்துடன், இந்த வைத்திய சாலையினை நவீனமயப் படுத்தும் முறையான திட்டவரைபை உடனடியாக கையளிக்குமாறு வைத்திய நிர்வாகத்தினரை நிருபம ராவ் கேட்டுக் கொண்டார்.

நேற்று நண்பகல் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர்த வைத்தியசாலையின் அபிவிருத்தி குறித்து அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினர் இதன் பின்னர் வைத்தியசாலையை சுற்றி பார்வையிட்டனர்.

(12,14)

## வீரவணக்கம்

தாயகம் மகிழ்ந்திட
1976
07
23



தாயகம் கலங்கிட
2005
02
25

கடற்புலி மேஜர்

# தயானந்தன்

(சின்னராசா தங்கவடிவேல்)

மானாங்கானை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மேஜர் தயானந்தன் என்றழைக்கப்படும் சின்னராசா தங்கவடிவேல் 25.2.2005 வெள்ளிக்கிழமை சுகவீனம் காரணமாகச் சாவடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற சின்னராசா - பூபதி தம்பதிகளின் அன்பு மகனும், நாகேஸ்வரி, இராசமணி (கனடா), மனோகரன், அழகேஸ்வரி (கூவில்), யோகேந்திரம் (வவுனியா), தர்மகுலசிங்கம் (லண்டன்), செயகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (லண்டன்), செல்லக்கிளி (டோகா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசரத்தினம், தேவதாஸ் (கனடா), சிவனேஸ்வரன் (கூவில்), தயாலட்சுமி, விஜயநிர்மலா (வவுனியா), சௌதியா மயூமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கலைவாணி (யாழ்.பல்கலைக்கழக 2ம் வருட மாணவி), கருணதாஸ் (மல்லாவி மத்திய கல்லூரி), கஜன் (சிதம்பராக் கல்லூரி) மற்றும் நிரோஷா, தனுஷா, மதீனா, கார்த்திகா, தமிழ்மாறன் (கனடா) மற்றும் லவன், தர்ஷன், அஜிந் (ஹாட்லிக் கல்லூரி), சஜிதா, எழில் ஆகியோரின் மாமனாரும் மினிஷா (முஸ்லிம் மகா வித்தியாலயம்), நிதர்ஷனா, விதுஷாந் (வல்வை மகளிர் மகாவித்தியாலயம்) கனிஷா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

இவரது வித்துடல் அஞ்சலிக்காக இல்லத்தில் வைக்கப்பட்டு, இன்று காலை 9 மணிக்கு இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலி இடம்பெற்று எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்படவுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

நெடியகாடு மானாங்கானை,
வல்வெட்டித்துறை.

(C/3849)

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.